விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி 25 சனிக்கிழமை (10.09.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 265

ராம்கோ

MADRAS CEMENTS LTD

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

RAMCO CEMENT

சீமெந்து

### ஜே.வி.பியுடனான ஒப்பந்தம் குறித்து

# பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி காட்டமான கடிதம்

## கட்சியிலிருந்து நீக்கவும் முடிபு?

(நமது நிருபர்)

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க, ஜனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று மாலை காட்டமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.**

**அக் கடிதத்தில் பிரதமர் ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் செய்து கொண்ட உடன்படிக்கை குறித்து தனது கோபத்தையும் ஆதங்கத்தினையும் வெளிப்படுத்தியுள்ளார்.**

பிரதமர் ஜே.வி.பியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் விசேடமாக சுனாமிக்குப் பின்னரான பொதுக் கட்டமைப்பை கைவிடுதல்; ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றினை காணல் போன்ற விடயங்களை ஏற்றுக்கொண்டுள்ளார். இதன் மூலம் சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்றையும் இவ்வளவு காலமும் பேணிக் காத்து வந்த கட்சியின் கொள்ளைகளையும் மீறிவிட்டார் என ஜனாதிபதி (10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நடைபெறும் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் பங்கேற்க வேண்டும்

### ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை யுத்தநிறுத்த அமுலாக்கம் தொடர்பாக கொழும்பில் நடைபெறும் பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் பங்கேற்கவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெனிட்டா பெர்ரெரோ வால்ட்னர் சர்வதேச செய்தி ஸ்தாபனத்திற்கு அளித்த நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்த அமுலாக்க பேச்சுக்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உயர்நிலையிலான பேச்சுக்கள் நடாத்தப்படும். தமிழீழ விடுதலைப் புலிகள் எப்படியான விடயங்களை முன்வைத்தாலும் அவர்கள் பேச்சு மேசைக்கு கண்டிப்பாகத் திரும்பவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்குமாறு இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள ஒவ்வொரு நாடும் தனித்தே முடிவெடுக்கும். தற்போதைய சிக்கலான சூழலில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரி வவுனியாவில் நேற்று சுட்டுக்கொலை

(வவுனியா)



வவுனியாவில் இனந்தெரியாத குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒருவர் பலியாகினார்.

வவுனியாவில் இரண்டாம் குறுக்குத் தெருவில் நேற்று 11.10 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தவர் மொகமட் ராஃபீக் (வயது 41) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

9 குண்டுகள் பாய்ந்த நிலையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புளொட் உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா திருநாவற்குளத்தில் முன்னாள் புளொட் இயக்க உறுப்பினர் ஒருவர் நேற்று முற்பகல் 11.40 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த சமயம் அவரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் முன்னாள் புளொட் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அரசியல்துறை பொறுப்பாளருடன் க.கா.குழு புளியங்குளத்தில் நேரடிச் சந்திப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானத்தை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் நேற்று சந்தித்து கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளனர்.

இச் சந்திப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான புளியங்குளத்தில் நடைபெற்றது.

அண்மைய வன்முறைகள் தொடர்பாகவும் வவுனியாவில் உள்ள தமிழீழ அரசியல்துறைப் போராளிகளின் பாதுகாப்பு குறித்தும் விவாதிக்கப்பட்டது.

ஈச்சங்குளத்தில் தமிழீழ தேசியக் கொடியை இறக்க மறுத்த அரசியல்துறை போராளியை இராணுவத்தினர் அச்சுறுத்தியது குறித்து கண்காணிப்புக் குழுவிடம் ஞானம் முறைப்பாடு செய்தார்.

ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து தமிழீழ அரசியல்துறைப் போராளிகள் மீளப் பெறப்பட்ட பின்பு நடத்தப்பட்ட முதலாவது சந்திப்பு இது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-4)

## புலிகளின் பகுதிக்கான போக்குவரத்துக்கள் நேற்று காலை சில மணிநேரம் மூடப்பட்டது

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசத்திற்கும் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குமிடையிலான பொதுமக்கள் போக்குவரத்திற்கு நேற்றுக்காலை 10 மணிவரை விசேட அதிரடிப்படையினரால் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக விடுதலைப் புலிகளின் நிர்வாகப்பகுதிகளில் நண்பகல் வரை இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது. முற்பகல் 10 மணியுடன் இந்தத் தடைகள் நீக்கப்பட்ட போதிலும் அச்சம் காரணமாக அப்பாதைகள் ஊடாக மக்கள் பயணம் செய்வதை தவிர்த்துக் கொண்டனர்.

தாழங்குடாவில் நேற்று முன்தினம் மாலை நடத்தப்பட்ட தாக்குதலில் விசேட அதிரடிப்படை சிப்பாய் உட்பட பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர். 6 பேர் காயமடைந்திருந்தனர்.

இதன் காரணமாகவே விசேட அதிரடிப்படைத்தரப்பு தமது ஆக்கிரமிப்புக்குட்பட்ட சோதனைச் சாவடிகளுக் கூடாக மண்முனை- கொக்கட்டிச்சோலை வாவி, அம்பிலாந்துறை - குருக்கள் மடம் வாவி மற்றும் பட்டிருப்புப் பாலம் ஊடாக போக்குவரத்திற்கு தடைவிதித்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## கதிர்காமர் கொலைக்குற்றம் 27 தமிழ் இளைஞர்கள் விடுதலை

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் 27 தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

இவ் விசாரணைகளின் அறிக்கையை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று சமர்பித்தபோதே பொலிஸார் இந்தத் தகவலை வெளியிட்டனர்.

இச் சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடத்தி முடிக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம் தொடர்பாக ஆராய நோர்வேயிலிருந்து சிறப்புத் தூதுவர்

(கொழும்பு)

நோர்வே சிறப்புத் தூதுவராக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் றொன் புறூவ் ஹெவ்டே விரைவில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இது தொடர்பாக நோர்வே அரசு வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில், அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தபோதும் அண்மை மாதங்களாக இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து வருவது குறித்து நோர்வே கவலை கொள்கிறது.

அனுசரணையாளர்கள் என்கின்ற வகையில் யுத்தநிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் தொடர்பாக பேச்சுக்களை நடத்துவது குறித்து கடந்த சில வாரங்களாக நோர்வே ஆலோசனை நடத்தியது. இருந்த போதும் பேச்சுக்களை எந்த இடத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952-3, 011-2360290, 011 - 2360291

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...

எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

# தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு



## இன்று ஏழாம் திருவிழா
## நயனங்கள் திறவும் அம்மா

மாசத்தியே கங்கை மதிசூடி வானவன்
வாமத்தில் உற்ற தாயே
மருவுமடி யார்தங்கள் பெருகுதுயர் ஓட்டி இவ்
வையம் புரக்கும் தாயே
வாசத்தி லேமிக்க மலரெலாம் கொண்டுநினை
மறவாது பூசை செய்தோம்
வன்பகையை ஓட்டிநின் அன்புநிலை காட்டி உன்
மைந்தர் எமைக் காருமம்மா,
நாசத்தி லேசென்று நாமெலாம் அழிவதா
நயனங்கள் திறவும் அம்மா
யாவரும் இன்புற்றிருக்கவும் செய்கருமம்
யாவையும் வெற்றிபெறவும்
தேசத்தி லேசமா தானமும் சாந்தியும்
சிறந்தோங்க நீயருளுவாய்
தெல்லிப் பழைப்பதியில் கோயில்கொண் டருள்கின்ற
செல்விதுர்க் காதேவியே!

தனங்கிளப்பூர் வ.சின்னப்பா

# உயிர்காக்கும் உன்னத தானம்

**யாழ்ப்பாண சத்தியசாயி நிறுவனம் 11.09.2005ஐ இரத்ததான தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. அன்றைய தினம் யாழ்.பல்கலைக் கழகத்திற்கு முன்பாக உள்ள சத்தியசாயி நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை இரத்ததான நிகழ்வு இடம்பெறும். இரத்ததானம் செய்ய விரும்பும் அன்பர்கள் இத்தினத்தில் அங்குவந்து இரத்ததானம் செய்யலாம்.**

உதவி தேவைப்படுபவர்களுக்கு தேவைப்படும் உதவியை உரிய நேரத்தில் மனமுவந்து வழங்குவதே சேவையாகும். எம்மிடம் இருப்பவற்றில் மற்றவர்களுக்கு தேவையானதை வழங்குவதே தானம் எனப்படும். அந்த வகையில் குருதி நம்மால் வழங்கக கூடியதாகவும், மற்றவரின் உயிரைக காப்பாற்றுவதற்கு அவசியமாகவும் உள்ளது.

குருதி உடலில் சுற்றி ஓடிக் கொண்டிருக்கின்ற இழையம் அது நாளாந்தம் உடலின் ஒரு பகுதியில் அழிக்கப்பட்டுக் கொண்டும், மற்றொரு பகுதியில் உற்பத்தியாக்கப்பட்டுக் கொண்டும் இருக்கின்றது. குருதி உற்பத்தியாக்கலும், அழிப்பும் உடல் இறக்கும் வரை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு செயல்.

உடலில் காயங்கள் ஏற்பட்டு குருதிப்பெருக்கு ஏற்படும் போது அவ் இழப்பை ஈடுசெய்யும் முகமாக குருதி உற்பத்தியாக்கம் விரைவுபடுத்தப்பட்டு ஓரிரு நாட்களுக்கிடையில் பழைய நிலையை அடைகின்றது. சடுதியாக அதிகளவு இரத்தம் இழக்கப்படும் போது, உடலினால் இரத்தம் உருவாக்கப்படுவதற்கிடையில் உயிரைக் காப்பாற்றுவதற்காக இரத்தம் ஏற்றப்படுகின்றது.

ஓரளவு குறைவான இரத்தம் இழக்கப்படும் போது உடலினால் குருதி உருவாக்கப்படுவதற்கிடையில் சேலைன் போன்றவற்றை ஏற்றி குருதிச் சுற்றோட்டத்தை ஒழுங்காக்குகின்றோம். பின்னர் உடலினால் குருதி உருவாக்கப்பட்டு நோயாளி பழைய நிலையை அடைகின்றார்.

நாம் பிறருக்காக இரத்தம் வழங்கும் போது மிகக் குறைந்தளவு இரத்தமே எம்மிலிருந்து' எடுக்கப்படுகின்றது. அதனால் இரத்ததானம் செய்து அன்றைய தினமே நாம் இயல்பாக எமது சாதாரண செயற்பாடுகளை செய்யக் கூடியதாக இருக்கும்.

அத்துடன் தானமாக வழங்கப்படும் குருதியில் இழக்கப்படும் சத்துக்குறைவாக இருப்பதால் எமது நாளாந்த உணவை உட்கொள்வதே போதுமானது. மேலதிகமாக விசேட உணவு உட்கொள்ள வேண்டிய தேவையில்லை.

தானமாக வழங்கப்படும் குருதியின் அளவுக்கு ஈடான சிறிதளவு நீர் ஆகாரத்தை உட்கொள்வதே போதுமானது. மேலதிகமாக எதுவும் தேவையில்லை. எமது உடல் தானாகவே குருதியை உற்பத்தி செய்துவிடும். இத்தகைய ஒரு சாதாரண இலகுவான செயற்பாடே இரத்ததானம் ஆகும்.

இத்தகைய எமக்கு சாதாரணமாக, இலகுவானதாக இருக்கும் இரத்ததானம் அடுத்தவரின் உயிரைக் காப்பாற்றி மீண்டும் வாழ்வதற்கு ஓர் சந்தர்ப்பத்தை அளிக்கக் கூடியதாக உள்ளது.

இத்தகைய உனனதமானதும், இலகுவானதுமான இரத்ததானத்தை செய்ய நாம் ஏன் தயங்கவேண்டும் இத்தகைய சந்தர்ப்பம் எமக்கு கிடைப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைய வேண்டும் ஒருவரின் உயிரைக் காப்பாற்றும் தகுதி எமக்கு இருப்பது சந்தோசம் அன்றோ.

நாம் மற்றவரை நேசிக்கும் போது, அடுத்தவர் உயிர் பிழைத்து நன்றாக வாழ்வது மகிழ்ச்சியைத் தருமன்றோ. எமது செயலின் பலனை நாம் உணரும் போது ஆத்ம திருப்தி ஏற்படும். இரத்தத்தை வழங்குவதென்பது அன்பின் வெளிப்பாடே. அதனாலேயே பகவான் சத்தியசாயி பாபா இரத்தத்தை அன்புத்திரவம் என்று குறிப்பிடுகின்றார்.

நாம் மற்றவரை நேசிக்கும் போது மற்றவருக்கு உதவும் மன நிலை ஏற்படுகின்றது. அத்தகைய நிலையில் உதவி செய்வதுகூட பெரிய விடயமாக எமக்குத் தெரியாது. அதேவேளையில் நாம் மனம் உவந்து முழுமனதுடன் மற்றையோருக்கு உதவும் போது எமக்குள் ஓர் ஆழமான அமைதியும் ஆனந்தமும் ஏற்படும். அவ் ஆனந்தம் மிகவும் இனிமையானதாக இருக்கும்.

யாழ்.வைத்தியசாலையில் பல்வேறு காரணங்களுக்காக நாளாந்தம் இரத்தம் தேவைப்படுகின்றது. ஒருவர் தானமாக வழங்கும் இரத்தம் பல்வேறு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கூறும வெவ்வேறு வகை தேவைகளுக்காக நோயாளிகளுக்கு ஏற்றப்படுகின்றது. எனவே ஒருவர் வழங்கும் இரத்தம் பலரைக் காப்பாற்றுவதற்கு பயன்படுகின்றது.

தினசரி பலர் இரத்த வங்கியில் இரத்ததானம் செய்கின்றனர். அத்துடன் தத்தம் இடங்களுக்கு இரத்த வங்கியினரை அழைத்து ஒரு குழுவாக இரத்ததானம் செய்கின்றனர். நான்கு மாதத்திற்கு ஒருமுறை எந்தவித பாதிப்பும் இல்லாது இரத்ததானம் செய்யலாம். பலர் இவ்வாறு நான்கு மாதத்திற்கு ஒருமுறையாக இரத்ததானம் செய்துகொண்டு வருகின்றனர். இதனால் அவர்கள் எத்தகைய பாதிப்புக்கும் ஆளாவதில்லை. ஆரோக்கியமாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றனர்.

**இ.சிவசங்கர்**

எனவே இவ் இரத்ததான நிகழ்வில் நீங்களும் பங்கெடுத்து இரத்ததானம் செய்து, தொடர்ந்தும இரத்ததானம் செய்கின்ற சேவையை கடைப்பிடிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். அழைக்கின்றோம். □

# இராசி பலன்

**10.09.2005**
**(ஆவணி 25, சனிக்கிழமை)**
**சப்தமி பின்னிரவு 1.56 மணிவரை**
**அனுசம் முன்னிரவு 11.51 மணிவரை**
**இராகுகாலம் 9.03 - 10.33 மணிவரை**
**சுபநேரம் 3.03 -4.33 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | அபகீர்த்தி, வீண்பகை, காரிய தடங்கல், போசனசுகம். |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், தனவருவாய், செல்வாக்கு, களஸ்திர நன்மை. |
| மிதுனம் | பணவருவாய், ஆரோக்கியம், எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி. |
| கடகம் | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, தொழில் சிந்தை, குடும்பக் கவலை. |
| சிங்கம் | பயந்த சுபாவம், நல்லசெய்தி, வேலையில் ஆர்வம், சுபசெலவு. |
| கன்னி | இனிய அனுபவம், அன்னியர் சந்திப்பு, பணவருவாய், முயற்சி கைகூடும். |
| துலாம் | மாதர் நட்பு, வேலைச்சுமை, பணவிரயம், காரிய தாமதம். |
| விருச்சிகம் | கற்பனை மிகுதி, நண்பர்கள் உதவி, போசன சுகம், காரியதாமதம். |
| தனுசு | பிதா சிந்தை, கோபப்படுதல், சுபசெலவு, முயற்சி தாமதம். |
| மகரம் | மனமகிழ்ச்சி, பெருமையடைதல், தொழில் நன்மை, உறவினர் வருகை. |
| கும்பம் | அதிகாரம், சுபநிகழ்ச்சி, உற்சாகம், காரிய அனுகூலம். |
| மீனம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, காரிய சிந்தை, பிரயாணம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

- வளவன்

# மாதிரி முன்பள்ளி

(பொன்னாலை)

தென்மராட்சிப் பிரதேசத்தில் நவீன வசதிகளுடன் கூடிய மாதிரி முன்பள்ளி ஒன்று நிறுவப்படவுள்ளது. இம் முன்பள்ளியை அமைத்துக்கொடுப்பதற்கு சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்று நிதி வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம் முன்பள்ளியில், நவீன கட்டட வடிவத்தில் பூங்கா, விளையாட்டுத்திடல், ஆசிரியர் பயிற்சி நிலையம், வள ஆளுகை நிலையம் ஆகியனவும் அமைக்கப்படும் என்றும் தெரியவருகின்றது.

இம் முன்பள்ளியானது சாவகச்சேரி மத்திய நகரப் பகுதியில் அமைக்கப்படும் என்றும் தகவல் தந்த வடடாரங்கள் தெரிவிக்கின்றன. (த-49)

# கடற்புலிகளின் துணைப்படை 3ஆம் அணிக்கு பயிற்சி ஆரம்பம்

வடமராட்சியில் மாவீரர் கடற்புலி லெப்.கேணல் மறவன் மாஸ்ரர் நினைவான தமிழீழ கடற்புலிகளின் துணைப்படையின் மூன்றாவது அணியினருக்கான பயிற்சி கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது.

வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள கடற்புலி லெப்.கேணல் மறவன் மாஸ்ரர் கடற்புலிகளின் துணைப்படை பயிற்சிக் கல்லூரியில் கடந்த புதன்கிழமை பகல் 11 மணிக்கு இப் பயிற்சிகள் ஆரம்பமாகின.

தொடக்க நிகழ்வில் பொதுச்சுடரினை வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் அரசியல்துறை பொறுப்பாளர் நிலவன் ஏற்றிவைத்தார்.

மாவீரர் லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் உருவப்படத்திற்கான ஈகச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

இதையடுத்து பயிற்சிகள் தொடங்கின. இம் மூன்றாவது அணியில் 120 இற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர். (ந-4)

# சாவ.மருத்துவமனைக்கு தொலைபேசி வசதிகள்

(பொன்னாலை)

சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனைக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரி நகர அபிவிருத்திக்குழு மற்றும் மருத்துவமனை அபிவிருத்திக் குழு ஆகியவை விடுத்து வந்த 'நீண்டகாலக் கோரிக்கையின் பயனாக இத் தொலைபேசி வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத் தொலைபேசி வசதிகள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனின் முயற்சியால் கிடைத்திருப்பதாகவும் இதன்மூலம் அவசர மருத்துவ சேவைகளை வழங்கும் பொருட்டு பொது மருத்துவமனை மற்றும் வெளியிடங்களுக்கான தொடர்புகளை ஏற்படுத்த முடிந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-49)

# வீதி திருத்தம்

வட்டுக்கோட்டை-உடுக்கியவளை விநாயகர் ஆலய வீதி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது என வலி-மேற்குப் பிரதேசபைச் செயலாள இ.இராசதுரை தெரிவித்துள்ளார்.

இவ் வீதியைத் திருத்துவதற்கு வசதியாக தற்போது, கற்கள் பறிக்கப்பட்டு வருகின்றன. சுமார் ஒரு கிலோமீற்றர் நீளமான இவ் வீதியைத் திருத்துவதற்கு வலி-மேற்குப் பிரதேசசபை சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதென்றும், இம்மாத இறுதிக்குள் வீதி திருத்தப்பட்டு விடும் என்றும் சபைச் செயலாளர் தெரிவித்தார்.

மேற்படி வீதி கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக திருத்தப்படாமல் இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (த-49)

# தபால் மூல வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல் வெளியானது

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு தகுதியானவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 நிலையங்களிலும் பெயர்ப்பட்டியல் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வாக்களிப்பு பெயர்ப்பட்டியலுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெயர்ப்பட்டியலை பார்வையிட்ட பின்னர் தபால் மூலம் வாக்களிப்புக்கு விண்ணப்பிக்க முடியுமென தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொதுவாக வேட்பு மனுக்கள் ஏற்றுக்கெள்வதற்காக திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் பெயர்ப்பட்டியலை வெளியிடுவது வழக்கமாகவிருந்த போதிலும் வாக்காளர்களின் வசதியீனங்களை கருத்தில்கொண்டு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் பெயர்ப்பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

1981ஆம் ஆண்டு 15ஆம் இலக்க சரத்திற்கு அமைய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தபால் மூலமான வாக்களிப்புக்காக விசேட கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்களே தகுதி உடையவர்களாவார்கள். வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று தமது வாக்கை வழங்க முடியாதவர்கள் தபால் மூல வாக்காளர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களில் முப்படையினர், பொலிஸார், அரச ஊழியர்களும் முக்கிய இடத்தை பெறுகின்றனர்.

தபால் வாக்காளர்கள் தமது விண்ணப்பங்களை தாம் பதிவு செய்த தேர்தற் தொகுதி அதிகாரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். இந்த அதிகாரி விணணப்பதாரியின் தகைமைகளை ஆராய்ந்த பின்னர் இது தொடர்பான அறிவித்தலை அவருக்கு விடுக்க வேண்டும் எனவும் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (ந-8)

# சீக்கியர்களிடம் மன்னிப்புக் கோரும் இந்தியா தமிழீழத்திடம் எப்போது மன்னிப்புக் கேட்கும்?

**பழ.நெடுமாறன்**

> 1975ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அவசரகாலக் கொடுமைகளுக்கு 1980ஆம் ஆண்டு பிரதமர் இந்திரா மன்னிப்புக் கோட்டார். 1984ஆம் ஆண்டு நடைபெற்ற சீக்கியர்கள் படுகொலை நிகழ்ச்சிக்கு 2005ஆம் ஆண்டு பிரதமர் மன்மோகன்சிங் மன்னிப்புக் கேட்டார். 1989ஆம் ஆண்டு இலங்கை சென்ற இந்திய அமைதிப்படை செய்த அட்டூழியங்களுக்கு யார், எப்போது மன்னிப்புக் கேட்பது?

> "இந்திய இராணுவம் மீது புலிகள் தாக்குதல் மேற்கொண்டால் வல்வையை அடியோடு எரிப்பேன். நூற்றுக்கணக்கில் மக்களைச் சுட்டுத் தள்ளுவேன். இராமாயணத்தில் இலங்கை எரிக்கப்பட்டதைப் போல் மீண்டும் இலங்கை எரியும். எங்களை யாரும் எதுவும் செய்ய முடியாது. நாங்கள் உலகின் 4ஆவது பெரிய இராணுவம்."

1989 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 2-4 வரையுள்ள மூன்று நாட்களிலும் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடத்திய படுகொலைகள் வரலாறு காணாத [illegible]யர நிகழ்ச்சி ஆகும்.

தம்பி பிரபாகரனையும் மற்றும் பல புலிகளையும் பெற்றெடுத்த ஊா என்பதனாலும், இவ்வு,ர் மக்கள் அனைவருமே புலிகளுக்கு முழுமையாக ஆதரவு தந்தவர்கள் என்பதனாலும் வல்வெட்டித்துறை மீது இந்திய இராணுவ அதிகாரிகளுக்கு மிகுந்த கோபம் இருந்தது. அந்தக் கோபத்தை அவர்கள் தீர்த்துக் கொண்ட விதம் மிகக் கொடூரமானது.

1919 ஆம் ஆண்டு, ஏப்ரல் 13 ஆம் நாள் இந்தியாவில் அமிர்தசரஸ் நகரத்தில் ஜாலியன்வாலாபாக் படுகொலை நடந்தது. மைதானத்தில் கூடியிருந்த அப்பாவிப் பொது மக்களைப் பிரித்தானிய இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டுப் படுகொலை செய்தது. அந்தப் படுகொலையைத் தலைமை தாங்கி நடத்திய பிரித்தானிய ஜெனரல் டையர் "சுட்டேன், சுட்டேன், குண்டுகள் தீரும்வரை சுட்டேன்" என்று கொக்கரித்தான். ஜாலியன் வாலாபாக் படுகொலை இந்திய மக்களை அன்று கொதித்தெழ வைத்தது. ஆனால், அதே இந்திய நாட்டைச் சோந்த இராணுவம் வல்வெட்டித்துறையில் மற்றொரு ஜாலியன் வாலாபாக்கை நடத்திக் காட்டியது.

ஜனதாதள தலைவாகளுள் ஒருவரும் என்னுடைய நண்பருமான ஜாாஜ் பொனாண்டஸ் இந்தப் படுகொலையை வியட்நாமில் நடைபெற்ற மயிலாய் படுகொலைக்கு ஒப்பிட்டாா. வியட்நாமில் மயிலாய் என்ற இடத்தில் அமெரிக்க இராணுவம் நடத்திய காட்டுமிராண்டித்தனமான படுகொலைகள பற்றி அறிய நேர்ந்த போது உலகெங்கும் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. அமெரிக்காவிலேயே பத்திரிகையாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள் ஒன்று திரண்டு இந்தக் கொடூரமான கொலைகளைப் பகிரங்கமாகக் கண்டித்தனர்.

ஆனால், வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடத்திய படுகொலைகளை இந்திய அரசு திட்டமிட்டு மறைத்தது. இந்தியப் பத்திரிகைகளுள பெரும் பகுதி இச்செய்தியை மறைப்பதில் ஒத்துழைப்புக் கொடுத்தன. ஆனால், வல்வெட்டித்துறையில் இச்சம்பவம் நடந்த 13 நாட்களுக்குப் பிறகு அங்கு சென்ற இலண்டன் பைனான்ஸியல் டைம்ஸ் பத்திரிகையின் டெல்லி நிருபர் டேவிட் ஹவுஸ்கோ இச்சம்பவத்தைப் பற்றிய விபரங்களை முதன் முதலாக ஆகஸ்ட் 17 ஆம நாளன்று அவரது பத்திரிகையின் வாயிலாக அம்பலப்படுத்தினாா. அதையடுத்து இலண்டன், டெலிகிராப் பத்திரிகையின் டெல்லி நிருபர் ஜெரமி கங்ரான் என்பவரும் இச்செய்தியை வெளியிட்டார். இந்தியப் பத்திரிகைகள் இச்செய்தியை அடியோடு மூடி மறைத்தன. வெளிநாட்டுப் பத்திரிகைகளில் இச்செய்தி பரபரப்பாக வெளிவந்த பிறகு செப்டம்பர் 3 ஆம் நாள் இந்தியன் எக்ஸ்பிரஸ்சிறிய அளவில் இச்செய்தியை வெளியிட்டது.

இந்த முறை வல்வெட்டித்துறைக்கு நான் சென்றபோது இந்தப் படுகொலைகள் பற்றிய முழு விவரத்தையும் அறிந்து கொள்ள முயற்சி செய்தேன். வல்லை மக்கள் குழுவின் தலைவா எஸ். செல்வேந்திரா, செயலாளா ஆனந்தராஜ், பொருளாளர் நடனசிகாமணி உட்பட பலரை நான் சந்தித்துப் பேசினேன். இப்படுகொலைகள் நடைபெற்று ஏறத்தாழ ஆறு மாதங்களுக்குப் பிறகு கூட அந்த அதிர்ச்சியில் இருந்து வல்லை மக்கள் மீளாததை நான் பார்த்தேன்.

1989 ஆம் ஆண்டு, ஆகஸ் மாதம் 2 ஆம் நாள் வல்வெட்டித்துறை சந்தைச் சதுக்கத்தில் காலை 11 மணிக்கு யாரும் எதிர்பாராத விதமாக விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதில் 6 இந்தியப் படை வீரர்கள் இறந்ததுடன் 11 பேர் காயம் அடைந்தனர்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து வல்வெட்டித்துறையைச் சுற்றி அன்றிருந்த இராணுவ முகாம்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான இந்திய இராணுவத்தினர் வெறியுடன் புறப்பட்டு வந்து வல்வெட்டித்துறையைச் சுற்றி வளைத்தனர். உடனடியாக ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினர். தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டது.

வீடுகளை விட்டு வெளியே வராமல் அச்சத்துடன் பதுங்கியிருந்த மக்களை வீட்டுக் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்து பதறப் பதறச் சுட்டுக் கொன்றார்கள். மொத்தம் 63 பேர் இவ்விதம் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்களுக்கு மருத்துவ உதவி செய்வதற்கு முன்வந்த பிரான்சு மருத்துவக் குழுவினரை ஊருக்குள் நுழையவே இந்திய இராணுவம் அனுமதிக்கவில்லை. தொடர்ந்து மூன்று நாடகளாக இராணுவத்தினர் ஊரைச் சுற்றி முற்றுகையிட்டு இருந்ததால் இறந்து போனவர்களின் பிணங்களைக்கூட அப்புறப்படுத்த முடியவில்லை. பிணங்கள் அழுகப்போன நிலையில் அந்தந்த வீடுகளுக்குளளேயே வைத்து உறவினாகளால் எரிக்கப்பட்டன. கணவா உடலை மனைவியும், மனைவியின் உடலைக் கணவரும், பெற்றோரின் உடலைப் பிள்ளைகளும், பிள்ளைகளின் உடலைப் பெற்றோரும் எரிக்க வேண்டிய அவலத்திற்கு ஆளாயினர்.

மொத்தம் 123 வீடுகள் அடியோடு நாசமாக்கப்பட்டன. 45 கடைகள் முழுமையாக எரிக்கப்பட்டுச் சாம்பலாயின. 12 மீன்பிடி படகுகள் நாசம் செய்யப்பட்டன. 176 மீன்பிடி வலைகள் எரிக்கப்பட்டன. பல வீடுகளில் தங்க நகைகள், பணம், மின்னணுப் பொருள்கள் இந்திய இராணுவத்தினரால் கொள்ளையடிக்கப்பட்டன. ஏராளமான பெண்கள் மிக மோசமான முறையில் கற்பழிக்கப்பட்டார்கள்.

இந்த நிகழ்ச்சி நடப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் இந்திய இராணுவ பிரிகேடியர் சங்கர் பிரசாத் என்பவர் மக்கள் குழு உறுப்பினர்களைக் கூட்டிப் பின்வருமாறு கொக்கரித்தாராம்.

அவர் மிரட்டியதைப் போலவே விரைவில் நடந்தது. அழகிய வல்லை நகரம் சுடுகாடானது. அந்தச் சோக வரலாற்றினைக் கீழே தந்துள்ளேன்.

மினி வீடியோ சினிமா கொட்டகை ஒன்றில் திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்த சுமாா 30 பேரை வெளியே கொண்டு வந்து நடுத்தெருவில் உச்சி வெயிலில் உட்கார வைத்தார்கள். அங்கு நின்ற ஒரு சக்கிய சிப்பாய் திடீர் என இயந்திரத் துப்பாக்கி மூலம் படபடவென்று சுட்டான்.

அண்மையில் திருமணம் செய்து கொண்ட இராஜரத்தினம் என்பவா அந்த இடத்திலேயே துடிதுடித்து மாண்டார். அவர் அருகில் இருந்த கருணாநந்தராஜா என்பவர் படுகாயத்துடன் கீழே விழுந்தார். அவர் மார்பில் இருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. அந்தப் பயங்கரங்களைக் கண்டு மற்றவர்கள் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். மற்றொரு இந்திய இராணுவ சிப்பாய் அங்கிருந்த கடைகள் மீது மண்ணெண்ணையை ஊற்றித் தீயை வைத்தான்.

இதற்கிடையில் சடையாண்டி கோயிலுக்குள் இருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட 20 பேரை வேறு சில சிப்பாய்கள் அடித்து இழுத்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் உடலிலிருந்து இரத்தம் பீறிட்டு வந்தது. அப்போது ஒரு ஜீப் வேகமாக வந்து நின்றது. அதிலிருந்து கீழே குதித்த சிப்பாய்கள் திடீர் என்று நாலா புறமும் தானியங்கித் துப்பாக்கிகளினால் சடசடவெனச் சுட்டார்கள். 40 வயதான சிவபாக்கியம், 60 வயதான தங்கராஜா ஆகியோர் அந்த இடத்திலேயே துடி துடித்துச் செத்தார்கள். முப்பதுக்கும் அதிகமானவர்கள் பலத்த காயத்துடன் கீழே சரிந்து விழுந்தார்கள். காயம் அடைந்தவர்கள் தண்ணீர், தண்ணீர் என்று கதறிக்கொண்டு இருந்தாகள். இரத்தவெறி பிடித்த இந்தியச் சிப்பாய்கள் அதைப் பற்றிக் கவலைப்படாமல் மேலும் மேலும் தங்கள் நரவேட்டையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்கள.

சிவபுர வீதி என்னும் தெருவை நானா பார்வையிட்டேன். அங்கு 10 வீடுகள் முழுவதுமாக எரிந்து நாசமாகிக் கிடப்பதைக கண்டேன். *(தொடரும்...)*

*இணையப் பார்வை*

# தேர்தல் கடமைகளுக்கு தபால் திணைக்களம் தயார்

(கொழும்பு)

அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில தபால் சேவை நடவடிக்கைககளை மேற்கொள்ளும் முறைமைகள் குறித்து தேர்தல ஆணையாளரிடம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தபால் மா அதிபர் சேவின் சேனாதீர தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல ஆணையர் தமக்கு இது குறித்து பேச்சுவார்த்தை நடத்த அழைப்பு விடுப்பார் என்று அவர் தெரிவித்தார்.

தேர்தலின்போது தபால் சேவை நடவடிக்கைளை மேற்கொள்ள தமது திணைக்களம் தயார் எனவும அதற்குத் தேவையான அனுபவம் தம்மிடம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தற்போது தபால் சேவை கிரமமாக நடைபெறுவதால் அப்பகுதிகளில் தேர்தல் கடமைகளை தாமதமின்றி முன்னெடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த-9)

# விளக்கமறியலில் நீதிமன்ற அதிகாரி

(கொழும்பு)

இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் நீதிமன்ற அழைப்பாணை விநியோகிக்கும் அதிகாரி ஒருவர் இம்மாதம் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பதுளை மாவட்ட நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டுவரும் வழக்கொன்றில் சம்பந்தப்பட்ட ஒருவரிடம் 3ஆயிரம் ரூபா இலஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் இவரைக் கைது செய்து கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது இவரை 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதவான் அஜஸ் நவரட்ண உத்தரவிட்டுள்ளார். (த-7)

# மஹோற்சவம்

(இணுவில்)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் அடுத்தமாதம் 2ஆம திகதி காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடாந்து 16 நாட்கள் உற்சவம் நடைபெறும். 16ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் சமுத்திர தீர்த்த திருவிழாவும் நடைபெறும். (த-122)

## ஊழல் மோசடி குற்றச்சாட்டு

# அனுருத்த ரத்வத்தை கைதாகி பிணையில் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை நேற்று முனதினம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சட்ட விரோதமான முறையில் 4 கோடி 15 இலட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான சொத்துக்களை ரத்வத்தை சம்பாதித்துள்ளார் எனறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றம் சுமத்தி யிருந்தது. இதனடிப்படையில் கைது செய் யப்பட்ட இவர் 25 ஆயிரம் ரூபா ரொக்கம் மற்றும் 3இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்வதற்கான அனுமதியை கொழும்பு மேலதிக நீதிபதி அஜித் அனவர்தன வழங்கினார்.

சட்டவிரோத ஆயுதங்கள், போதைப் பொருட்கள், தங்கம் மற்றும் பணம ஆகியவற்றை பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து நீதிமன்ற அனுமதி பெற்று ஜெனரல் அனுருத்த ரத்வத்தை மற்றும் அவரது மனைவி ஆகியோரது வங்கிப் பெட்டகங்கள் சோதனையிடப்பட்டதாகவும் அதன் அடிப்படையில் 4 கோடி 21 இலட்சம 80 ஆயிரம் பெறுமதியுடைய 80 சேமிப்பு வைப்புச் சான்றிதழ்கள் அங்கு கண்டுபிடிக்கப்பட்டதாகவும் ஆணைக்குழு நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

1997 மார்ச் 1 முதல் 2002 ஓகஸ்ட் 31 வரையிலான காலப்பகுதியில் இவர் சட்ட விரோதமான முறையில் மேலதிக வருமானமாக இவற்றைச் சம்பாதித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சமர்ப்பித்த விளக்கம் ஏற்க முடியாது என்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை வடக்கு இலந்தைவனம் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

தினமும் மாலை 7 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா 'மகாபாரதம்' பற்றி தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

## இன்று ஒரு தகவல்

# அறிவை அளக்கலாம்

ஒருநாள் ஒரு அலுவலகத்திற்குப் போயிருந்தேன். அங்கே ஒரு மேலதிகாரி தன்னிடம் வேலை பார்க்கும் ஒருவரிடம் என்னவோ சொல்லிக்கொண்டிருந்தார்.அவர் சொல்லச் சொல்ல இவர் அதைக் கேட்டுவிட்டு ஆகா ஓகோ என்று கையைத்தட்டி சத்தம் போட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார். "அவர் என்ன சொல்கிறார் இவர் ஏன் சிரிக்கிறார்" என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. அந்தப் பெரிய அதிகாரி போனவுடன் இவரிடம் போய் மெதுவாகக் கேட்டேன்.

"ஏன்சார்... அவர் உங்களிடம் சொன்னது ஜோக் மாதிரி யும் தெரியவில்லையே... அதற்குப்போய் இப்படிச் சிரித் தீர்களே" என்றேன். "சார் அவர் சொன்னது ஜோக்கில்லை என்பது உங்களுக்குத் தெரிகிறது... எனக்குத் தெரிகிறது ஆனால் அவருக்குத் தெரியவில்லையே! தான் சொல்வது ஜோக் என்று அவர் நினைக்கிறார். அதனால் நான் சிரிக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் அவர் எனக்கு மேலதிகாரி" என்றார்.

இந்த ஆள் மிகவும் புத்திசாலி... அறிவுள்ளவர் என்று பெயர் வாங்கியிருக்கிறார். வாழ்க்கையை கஷ்டமில்லாமல் ஓட்டத் தெரிந்து வைத்திருக்கிறார்.

அறிவு என்பது என்ன? என்று கேட்டால் "சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் நடந்துகொள்வதுதான் அறிவு" என்று சில அறிவாளிகள் பதில் சொல்கின்றனர்.

இந்த அறிவு என்பது நமது உடம்பில் எங்கே இருக்கிறது? மூளையில் இருக்கிறது. அதில் ஒன்றும் சந்தேகமில்லை. இந்த அறிவை அளக்க முடியுமா? முடியும்! நமக்குத் தெரிந்த வரைக்கும் அறிவுள்ள வன்,அறிவில்லாதவன் என இரண்டு வகையாகப் பிரித்து விடுகிறோம் சுலபமாக! அறிவுள்ளவனை புத்திசாலி என் கிறோம். அறிவில்லாதவனை மண்டு என்கிறோம். ஆனால் அறிவுள்ளவர்களையே நிபுணர்கள் தரவாரியாகப் பிரிக்கி றார்கள்.

அறிவான தரத்தை பாகுபடுத்தி ஒன்று முதல் 200வரைக் கும் கணக்கிட்டிருக்கிறார்கள். அதற்கு **IQ** அதாவது **Intelligence Quotient** என்ற பெயரும் வைத்திருக்கிறார்கள்.

இநத **IQ** 90 முதல் 100வரை இருந்தால் அவன் சராசரி மனிதன். 110இலிருந்து 120 வரைக்கும் இருந்தால் அவன் சராசரிக்கும் மேல்! 120 இலிருந்து 130 வரைக்கும் இருந்தால் அவ்ன் ஒரு சிறந்த புத்திசாலி! 130 இலிருந்து 140 வரைக் கும் இருந்தால் அவன் பிறவியிலேயே புத்திசாலித்தனம் உள்ளவன். 140 இற்கும் மேல் **IQ** இருந்தால் அவன் மேதை அதாவது **Genius**.

அதுசரி இதுவரைக்கும் 90இற்கு மேலேயே பார்த்துக் கொண்டு போகிறோமே இப்போது நமது கணக்கிற்கு வரு வோம். 90 இற்குக் கீழே போகப் போக மந்தம்... அதிக மந்தம்...அளவு கடந்த மந்தம் என்று பிரித்திருக்கிறார்கள் அதனால் ஒருவருடைய **IQ**வைக் கணக்கிட்டு அவருடைய புத்திசாலித்தனம் எந்தளவு இருக்கிறது என்பதைத் திட்ட வட்டமாகக் கூறிவிடலாம்.

ஒரு பெரிய மனிதன் இருந்தார். வசதியான ஆள்தான். இருந்தாலும் செலவு செய்யமாட்டார். கஞ்சன் அவருடைய மனைவிக்குத் திடீரென்று உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. கணவர் பட்டணத்திற்குப் போய் ஒரு மருத் துவரை அழைத்து வந்தார்.

கொஞ்சநாள் இவரது வீட்டிலேயே தங்கி வைத்தியம் செய்ய அந்த டாக்டர் கிராமத்துக்கு வந்து அந்தப் பெரிய மனிதரின் வீட்டில் கொஞ்சநாள் தங்கினார்.

அவரது மனைவிக் குத் தீவிரமாக சிகிச்சையளித்தார். இருந்தாலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை இறந்துவிட்டார்.

அதன்பின் அந்த டாக்டர் புறப்பட்டார். "ஐயா... நான் புறப் படுகிறேன். "எனக்குத் தரவேண்டிய பணத்தைத் தருகிறீ களா?" என்றார். அந்தப் பெரிய மனிதன் பார்த்தார். "டாக்டர்! நீங்கள் எனது மனைவியைக் காப்பாற்றினீர்களா?" என்றார். 'இல்லை'. என்றார் டாக்டர். "சரி... என் மனைவியைக் காப்பாற்ற முடியாத நீங்கள் அவளைச் சாகடித்தீர்களா?" என்று கேட்டார். "ஐயோ நான் உங்கள் மனைவியைச் சாகடிக்கவில்லை. அவர் வியாதியினால் தான் செத்தார்" என்றார் டாக்டர்.

இப்போது அந்தப் பெரிய மனிதன் சொன்னார். "டாக்டர் நீங்கள் என் மனைவியைக் காப்பாற்றவும் இல்லை. சாக டிக்கவும் இல்லை! காப்பாற்றவும் முடியாத சாகடிக்கவும் முடியாத உங்களுக்கு நான் எதற்காக சிகிச்சைப் பணம் கொடுக்க வேண்டும்'' என்றார்.இவரது **IQ**வைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சமாதான முயற்சி, பொருளாதார அபி.க்கு உதவ எப்போதும் ஜப்பான் தயார்

## அக்கியோ சூடா உறுதியளிப்பு

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டிருப்பது இலங் கையின் சமாதான முயற்சிகளுக்குப் பெரும் பின்ன டைவாக அமைந்திருக்கின்றன.

இதன்மூலம் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக் கள் யுத்தநிறுத்த உடன்படிக்கையிலும், சமாதான முயற்சிகளிலும் கூடுதலாக அர்ப்பணித்து செயற்பட வேண்டியது அசியமென இலங்கைக்கான ஜப்பானி யத்தூதுவர் அக்கியோ சூடா வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு-கிழக்கில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றும் விசேட திட்டத்திற்கு ஜப்பான் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இது தொடர்பான ஏற்பாடுகள் நேற்று முன்தினம நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சில் பூர்த்தி செய்யப்பட்டன.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந் நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற் றுகையில்,

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காகவும், சமாதான முயற்சிகளுக்காகவும் உதவிசெய்ய ஜப்பான் எப்போதும் தயாராகவே இருக்கின்றது.

இதற்கேற்ற விதத்தில் கண்ணிவெடி அகற்றும் திட்டத் தை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

வடக்கு-கிழக்கில் ஒரு கோடி 20 இலட்சம் சதுர மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் முற்றாக அப் புறப்படுத்தப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் இப்பிரதேசங்களில் இடம்பெயர்ந்த வர்களை மீளக் குடியமர்த்தும் திட்டம் மிக விரைவில் வெற்றிகரமாக பூர்த்திசெய்ய முடியும் என்றார்.

கண்ணிவெடிகளை அகற்றும் விசேட திட்டத்தற்கு ஜப்பானிய அரசாங்கம் சர்வதேச, அரச சார்பற்ற நிறு வனங்கள் ஊடாக பதினெட்டரைக் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அத்துடன், 78 கோடி ரூபாவை விசேட நிவாரண மாக இலங்கை அரசாங்கத்துக்கு ஜப்பான் வழங்கியுள்ள மையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

# நாட்டை யுத்தத்திற்குள் இழுக்க மஹிந்த கடும் பிரயத்தனம்

## திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட் பாளர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டை யுத்தத்தினை நோககி இட்டுச்செல்ல தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

கடந்த சில வாரங்களாக அதனைக் கண்கூடாகக காணக்கூடியதாக உள்ளதென கடந்த புதன்கிழமை எதிர்ககட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கட்சியின் பிரதிப் பொதுச செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரி வித்தார்.அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி.என்பன பிர தமருக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்ததுடன் இந்த நிலைமை மேலும் வக்கிரமடைந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள இக்காலப் பகுதியில் அரசாங்க ஊடகங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு கோரி தோதல் ஆணையாளரிடம் நாங்கள் மகஜர் ஒன்றைக் கையளித் துள்ளோம்.

தேர்தல் காலத்தில் அரச ஊடகங்களை பக்கச் சார் பாகப் பயன்படுத்தக்கூடும். இதனைக் கருத்திற் கொண்டே தேர்தல் ஆணையாளரிடம் இம் மகஜரினைக் கைய ளித்தோம். நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.

அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலுக்காக அரச உடமை களை துஷ்பிரயோகம் செய்ய ஆரம்பித்துள்ளன. பிரத மரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகை தற்போது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கான கேந்திர நிலையமாக மாற்றமடைந்துள்ளது.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஊடகங்கள், உடமைகள் என்பன சட்டவிரோதமாக தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவது குறித்து தேர்தல் ஆணையாளரிடம் முறையீடு செய்துளளோம் எனவும் குறிப்பிட்டார். (ந-4)

# —15 வருட காலத்திற்கு அமைவாக— ஐ.தே.க கொள்கைத்திட்டம் தயாரிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட் பாளர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நேற்று முன்தினம் செய்துகொள்ளப்பட்ட இணக்க உடன்படிக்கையில் காணப்படும் விடயங் களால் நாட்டு மக்களை மேலும் தவறான வழியில் இட்டுச்செல்ல இரண்டு கட்சிகளும் முற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

பிரதமர் மஹிந்த எக்கட்சியின் ஜனாதிபதி வேட் பாளர் எனக் கூறமுடியாது என ஐக்கிய தேசியக் கட்சி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. இது நாட்டு மக்களுக்கு மிகப் பெரிய குழப்பமான விடயம் என அக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலக் கொள்கைகளை அடகுவைத்து அரசியலில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்காக தேசிய கொள்கை அடங்கிய செயற்திட்டம் ஒன்றினை அறிமுகப் படுத்தவுள்ளோம்.

சுமார் 15 வருட காலத்திற்கு கல்வி, சுகாதாரம், பொரு ளாதாரம் ஆகிய துறைகளில் மாற்றமடையத் தவறான கொள்கைத் திட்டமொன்றே அறிமுகப்படுத்தப்படவுள் ளது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் செயற்திட்டம் குறித்து ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடவிருப்பதாகக் குறிப்பிட்ட திஸ்ஸ அத்தநாயக்க, ஜனாதிபதி வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் இதுபற்றி நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார். இப் புதிய கொள கைத் திட்டத்தினை தயாரிப்பதற்காக தொடர்நதும் அரசி யல்வாதிகள், மக்கள் பிரதிநிதிகள், தொழில்சங்கப் பிரதி நிதிகள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருவ தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

# மகாசங்கங்களின் பொறுப்பற்ற செயற்பாட்டால் — காரை. சமுர்த்தி வங்கியில் பல இலட்சம் ரூபா முடக்கம்

## நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

(காரைநகர்)

மகாசங்கங்களின் பொறுப்பற்ற செயற்பாட்டால் காரைநகர் சமுர்த்தி வங்கியில் பல இலட்சம் ரூபா முடக்கப்பட்டுள்ளது.

இதனை முதலீடு செய்வதற்கு விரைவில் நட வடிக்கை எடுக்குமாறு காரைநகர் சமுர்த்தி வங்கிச் சங்க கட்டுபபாட்டுச் சபைத் தலைவர் கடிதமூலம் யாழ் அரச அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

காரைநகர் சமுர்த்தி வங்கி சண்டிலிப்பாய் மகாசங கத்தினூடாகவே முதலீடுகளை மேற்கொண்டு வந் தது. ஆனால், கடந்த மாதம் மகாசங்க செயற்பாடுகள அனைத்தும் சண்டிலிப்பாய் மகாசங்கத்தில் இருந்து சங்கானை பிரதேச செயலக மகாசங்கத்திற்கு மாற்றப பட்டுள்ளதாக சமுர்த்தி அதிகாரசபையின் கடிதமூல அறிவித்தலைத் தொடர்ந்து சண்டிலிப்பாய் மகாசங்க நடவடிக்கைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டது.

ஆனபோதும், சங்கானை பிரதேச செயலகம் மகாசங் கத்தினை உருவாக்கவோ அல்லது சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் உரிய முறைப்படி ஆவணங்களைக் கைமாறவோ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் காரைநகர் சமுர்த்தி வங்கியினால மகாசங்கத் தினூடாக முதலீடு செய்ய முடியாதுள்ளது.

ஆதலால் பல இலட்சம் ரூபா பணம் சமுர்த்தி வங்கி யில் முடங்கியுள்ளதோடு குறித்த தொகைக்குரிய முதலீ டிற்கு வருமானம் பெறுவதற்கு பதிலாக மேலதிக வட்டி செலுத்த வேண்டியேற்பட்டு வருமான இழப்பு ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளளது.

இதற்கு மகாசங்கங்களின் பொறுப்பற்ற செயற்பாடே காரணமாகும். ஆகவே, விரைவில் முதலீடு செய்வதற்கு விரைந்து நடவடிக்கை எடுத்துதவ வேண்டுமென அக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ந-246)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல்-2005

**முல்லைத்தீவு உதவி அரச அதிபர் பிரிவு**

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் மிகுதிப் பெயர் விபரம் வருமாறு:-

8.மு/158 திரு.நல்லதம்பி குமாரசாமி
9.மு/163 திரு.செல்லையா சுப்பிரமணியம்
10.மு/189 திரு.முத்தையா திருநாவுக்கரசு
11.மு/194 திரு.முருகேசு வைத்திலிங்கம்
12.மு/232 திரு.சின்னத்துரை தர்மலிங்கம்
13.மு/235 திரு.கந்தையா தம்பிஐயா
14.மு/237 திரு.நாகலிங்கம் துரைசிங்கம்
15.மு/247 திருமதி.தெய்வானைப்பிள்ளை கணபதிப்பிள்ளை
16.மு/286 திரு.இளையதம்பி தங்கராசா
17.மு/293 திரு.முருகேசு தம்பிராசா
18.மு/299 திரு.சின்னத்தம்பி சிவஞானசுந்தரம்
19.மு/300 திரு.தம்பிப்பிள்ளை சிவசண்முகநாதன்
20.மு/304 திரு.பொன்னையா கணபதிப்பிள்ளை
21.மு/305 திருமதி.தங்கம்மா சுப்பிரமணியம்
22.மு/319 திரு.விசுவலிங்கம் சுப்பையா
23.மு/321 திரு.வைத்திலிங்கம் தெய்வேந்திரம்
24.மு/334 திரு.ஆறுமுகம் ஐயாத்துரை
25.மு/357 திரு.சின்னப்பிள்ளை பேரம்பலம்
26.மு/366 திரு.வேதாரணியம் கனகையா
27.மு/420 திரு.பொன்னன் நல்லதம்பி
28.மு/481 திரு.சின்னையா ஞானசேகரம்
29.மு/485 திருமதி.சீதேவி அம்பலவாணர்
30.மு/503 திரு.செல்லப்பா செல்வரத்தினம்
31.மு/509 திரு.சூசைப்பிள்ளை சுவாம்பிள்ளை
32.மு/510 திரு.ஞானப்பிரகாசம் சிறில்
33.மு/550 திரு.சின்னத்துரை துரைராசா
34.மு/628 திரு.சூசை அந்தோனிமுத்து
35.மு/639 திரு.கந்தையா பரராசசிங்கம்
36.மு/646 திரு.மத்தியாஸ் அலேஸ்
37.மு/648 திரு.சின்னையா நாகரத்தினம்
38.மு/682 திரு.இறப்பியல் அன்ரனி அமிர்தநாயகம்
39.மு/698 திரு.பனாந்து அருளானந்தம்
40.மு/735 திருமதி.இராசம்மா வினாசித்தம்பி
41.மு/739 திரு.கந்தையா முத்தையா
42.மு/802 திருமதி.பராசக்தி விக்கினேசுபரர்
43.மு/805 திரு.செல்லையா பொன்னம்பலம்
44.மு/807 திருமதி.கமலா சிவசிதம்பரம்
45.மு/809 திரு.தனுஸ்கோடி முத்துக்குமாரு
46.மு/812 திரு.சின்னையா சண்முகநாதன்
47.மு/819 திரு.மினாசி செல்லப்பா
48.மு/828 திரு.கந்தையா கெங்காதரம்
49.மு/829 திரு.கந்தையா இராதாகிருஷ்ணன்
50.மு/833 திரு.கணபதிப்பிள்ளை கனகசிங்கம்
51.மு/868 திருமதி.இலட்சுமி சிவஞானம்
52.மு/882 திருமதி.ஜெயராணி அன்ரனி
53.மு/918 திரு.வேலுப்பிள்ளை இளையதம்பி
54.மு/930 திரு.ஜெறிமையா பத்மநாதன்
55.மு/934 திருமதி.பாக்கியம் தங்கராசா
56.மு/963 திரு.வேலுப்பிள்ளை செல்லையா
57.மு/977 திரு.ஆறுமுகம் இரத்தினம்
58.மு/978 திரு.ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை
59.மு/982 திரு.கயிலன் வீரகத்தி
60.மு/1021 திரு.வல்லிபுரம் அன்னலிங்கம்
61.மு/1056 திரு.கந்தையா சண்முகம்
62.மு/1060 திருமதி.தவமணிதேவி சிவப்பிரகாசம்
63.மு/1113 திரு.சோமசுந்தரம் சிவசுப்பிரமணியம்
64.மு/1146 திரு.கந்தவனம் நடராசா
65.மு/1147 திரு.யோசேப் தாமோதரம்பிள்ளை
66.மு/1166 திரு.யோசேப் அருளப்பு
67.மு/1190 திரு.இராமலிங்கஐயர் அருளானந்தக் குருக்கள்
68.மு/1203 திரு.நவரத்தினம் செல்வராசா
69.மு/1209 திரு.சுப்பிரமணியம் செல்வராசா
70.மு/1265 திரு.சின்னத்தம்பி பொன்னம்பலம்
71.மு/1272 திருமதி.முத்தம்மா சரவணமுத்து
72.மு/1274 திரு.சவரிமுத்து அன்ரன்பிறிற்றோ
73.மு/1279 திரு.சின்னப்பு கந்தப்பிள்ளை
74.மு/1286 திரு.சின்னப்பிள்ளை சிவகுரு
75.மு/1326 திரு.நல்லதம்பி இராசதுரை
76.மு/1351 திரு.கயிலாயபிள்ளை குணலிங்கம்
77.மு/1352 திரு.தங்கராசா மகாலிங்கம்
78.மு/1367 திரு.கிரிபண்டா சைமன்
79.மு/1434 திரு.சின்னத்தம்பி தர்மலிங்கம்
80.மு/1509 திரு.ஆழ்வாப்பிள்ளை சச்சிதானந்தம்
81.மு/1544 திரு.கந்தையாபிள்ளை விஸ்வலிங்கம்

**முல்லைத்தீவு உதவி அரச அதிபர் பிரிவு**

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-

1.மு/44 திரு.பிச்சைக்காரன் ஆறுமுகம்
2.மு/68 திரு.முருகுப்பிள்ளை தர்மலிங்கம்
3.மு/109 திரு.கனகசபை அருளானந்தம்
4.மு/125 திரு.இராமலிங்கம் பொன்னையா
5.மு/165 திரு.மாணிக்கவாசகர் விஜயகுமார்
6.மு/173 திருமதி.பொன்னாச்சி கந்தசாமி
7.மு/228 திரு.நாகலிங்கம் சுந்தரலிங்கம்
8.மு/256 திருமதி.திலகவதி செல்லத்தம்பி
9மு/260 திரு.சின்னத்தம்பி தவசிங்கம்
10.மு/277 திரு.வினாசித்தம்பி தங்கராசா
11.மு/290 திரு.சுப்பிரமணியம் குமாரசாமி
12.மு/346 திரு.ஆறுமுகம் சேனாதிராசா
13.மு/354 திரு.தம்பு யோகராசா
14.மு/385 திரு.கந்தப்பிள்ளை சுப்பிரமணியம்
15.மு/440 திரு.பொன்னையா மகாலிங்கம்
16.மு/487 திரு.சின்னத்தம்பி கனகநாயகம்
17.மு/493 திரு.தர்மலிங்கம் குழந்தைவேலு
18.மு/494 திரு.இராசதுரை காந்தராசா
19.மு/520 திரு.சின்னத்தம்பி சிவசிதம்பரம்
20.மு/527 திரு.யோன்பிள்ளை ஜோஜ்தவராசா
21.மு/548 திருமதி.ஆரோக்கியம் தாவீது
22.மு/589 திரு.மரியாம்பிள்ளை இராயப்பு
23.மு/601 திரு.செபமாலை செல்வராசா
24.மு/632 திரு.அந்தோனிமுத்து சந்தியோகுராசமுத்து
25.மு/635 திரு.சவரிமுத்து செபமாலை
26.மு/652 திருமதி.கலாநிதி பரமராசா
27.மு/702 திரு.வேலாயுதம் கமலநாதன்
28.மு/752 திருமதி.இராசம்மா இராசசேகரம்
29.மு/768 திரு.செபஸ்தியாம்பிள்ளை அந்தோனிப் பிள்ளை
30.மு/777 திரு.சின்னத்தம்பி ராஜா
31.மு/785 திரு.முடியப்பு அல்வேட்
32.மு/810 திரு.இராசையா வீரசிங்கம்
33.மு/815 திரு.சதாசிவம் நடராசா
34.மு/836 திரு.மாணிக்கம் இராசா
35.மு/870 திருமதி.கலைச்செல்வி மகேந்திரராசா
36.மு/910 திரு.கனகையா தவராசா
37.மு/970 திரு.கணபதிப்பிள்ளை பரமானந்தம்
38.மு/1024 திரு.சபாரட்ணக்குருக்கள் மாணிக்க வாசகசர்மா
39.மு/1033 திரு.கந்தையா நடராசா
40.மு/1068 திரு.செபமாலை சூசைப்பிள்ளை
41.மு/1081 திருமதி.கமலம் சுப்பிரமணியம்
42.மு/1086 திரு.கனகையா அழகேந்திரன்
43.மு/1102 திருமதி.றோசலீன் திருச்செல்வம்
44.மு/1110 திரு.ஐயாத்துரை விவேகானந்தன்
45.மு/1120 திரு.இராயப்பு குணசீலன்
46.மு/1131 திரு.டானியல் செபஸ்தி
47.மு/1177 திருமதி.ஆரோக்கியமேரி யோசப்தம்பிராசா
48.மு/1179 திரு.நல்லதம்பி வேலாயுதம்
49.மு/1183 திரு.குணரத்தினம் இராசநாயகம்
50.மு/1185 திரு.கட்டையர் கிருஸ்ணன்
51.மு/1208 திரு.கிருஸ்ணபிள்ளை உதயகுமார்
52.மு/1210 திரு.நடேசு கந்தராசா
53.மு/1213 திருமதி.சரஸ்வதி சிவராசா
54.மு/1241 திரு.செல்வன் யோகதாஸ்
55.மு/1242 திரு.நடேசு வினாயகமூர்த்தி
56.மு/1261 திரு.வேலுப்பிள்ளை இரத்தினசபாபதி
57.மு/1311 திரு.வேலுப்பிள்ளை சண்முகநாதன்
58.மு/1337 திரு.சதாசிவம் தில்லையம்பலம்
59.மு/1347 திரு.வீரகத்தி நாகலிங்கம்
60.மு/1361 திரு.ஆறுமுகம் செல்லத்துரை
61.மு/1380 திரு.மயில்வாகனம் சிவகுருநாதன்
62.மு/1382 திரு.சுப்பிரமணியம் நற்குணராசா
63.மு/1388 திரு.அல்பிறற் பாலசிங்கம்பத்திநாதர்
64.மு/1392 திரு.வேலாயுதம் ரவீந்திரன்
65.மு/1430 திரு.மோசஸ் அன்ரன் பெனடிற்
66.மு/1463 திருமதி.நாகமுத்து சின்னப்பு
67.மு/1466 திரு.செல்லத்துரை கணேசமுதலிப் பிள்ளை
68.மு/1473 திருமதி.எலிசபெத்மலர் இராசேந்திரம்
69.மு/1520 திரு.அழகு உக்குரவேல்
70மு/1527திரு. சுப்பிரமணியம் சிவராசா

**வவுனியா உதவி அரச அதிபர் பிரிவு**

வவுனியா உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-

1.வ/வ/50 திருமதி.செல்வரத்தினம் மாணிக்கம்
2.வ/வ/53 திருமதி.தங்கப்பொன்னு சுப்பிரமணியம்
3.வ/வ/73 திரு.இராசன் வீரையா
4.வ/வ/78 திரு.செல்த்துரை சபாரத்தினம்
5.வ/வ/88 திரு.இராமலிங்கம் உருத்திரசிங்கம்
6.வ/வ/101 திரு.இளையதம்பி சபாபதிப்பிள்ளை
7.வ/வ/106 திரு.நாகமுத்து நல்லையா
8.வ/வ/115 திரு.ஆறுமுகம் தருமலிங்கம்
9.வ/வ/121 திரு.சின்னத்துரை தம்பையா
10.வ/வ/130 திரு.முத்தையா செல்வரத்தினம்
11.வ/வ/133 திரு.முத்துராசா பூபாலசிங்கம்
12.வ/வ/140 திருமதி.பரமேஸ்வரி இராசதுரை
13.வ/வ/142 திருமதி.சொர்ணலட்சுமி மார்க்கண்டு
14.வ/வ/162 திரு.முருகேசு தனஞ்செயன்
15.வ/வ/170 திரு.பாலசிங்கம் சுப்பிரமணியம்
16.வ/வ/171 திரு.செல்லையா செல்வரத்தினம்
17.வ/வ/179 திரு.வயித்தியாம்பிள்ளை பெனடிக்ற் ஞானப்பிரகாசம்
18.வ/வ/225 திரு.பொன்னையா சரவணபவானந்தம்
19.வ/வ/231 திரு.வினாசித்தம்பி பவேந்திரன்
20.வ/வ/249 திரு.சின்னப்பு கணபதிப்பிள்ளை
21.வ/வ/273 திரு.கணபதிப்பிள்ளை தியாகராசா
22.வ/வ/276 திருமதி.பாக்கியம் நாகரத்தினம்
23.வ/வ/289 திரு.பொன்னையா பாலசுப்பிரமணியம்
24.வ/வ/312 திரு.நல்லதம்பி வீரவாகு
25.வ/வ/317 திரு.கார்த்திகேசு கனகசிங்கம்
26.வ/வ/359 திரு.கணபதிப்பிள்ளை சின்னத்துரை
27.வ/வ/387 திரு.முத்துத்தம்பி தெட்சணாமூர்த்தி
28.வ/வ/394 திரு.நல்லையா தர்மபுத்திரன்
29.வ/வ/400 திரு.ஆறுமுகம் பத்மநாதன்
30.வ/வ/401 திரு.செல்லப்பா இராசசேகரம்
31.வ/வ/421 திரு.சுப்பிரமணியம் சோமசேகரம்
32.வ/வ/433 திரு.நாயகம் நாகப்பன்
33.வ/வ/441 திரு.சிறிகண்டு முருகையா
34.வ/வ/455 திரு.சவரிமுத்து இராசலிங்கம்
35.வ/வ/507 திரு.கறுப்பையா சிதம்பரம்
36.வ/வ/512 திரு.காசிப்பிள்ளை பாலசிங்கம்
37.வ/வ/572 திருமதி.கற்பகம் துரைராசா
38.வ/வ/577 திரு.சுவானி சந்தியோகு
39.வ/வ/591 திரு.சின்னத்தம்பி மகாலிங்கம்
40.வ/வ/607 திருமதி.வள்ளிப்பிள்ளை கணபதிப்பிள்ளை
41.வ/வ/621 திரு.சிற்றம்பலம் பத்மநாதன்
42.வ/வ/651 திரு.முத்துக்குமாரு சிவசுப்பிரமணியம்
43.வ/வ/664 திரு.கணபதிப்பிள்ளை தியாகராசா
44.வ/வ/677 திரு.குருநாதன் நல்லதம்பி
45.வ/வ/681 திரு.வேலுப்பிள்ளை இராசநாயகம்
46.வ/வ/710 திரு.சிவகுரு சரவணமுத்து

**வவுனியா உதவி அரச அதிபர் பிரிவு**

வவுனியா உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-

1.வ/வ/17 திரு.கோபால் ஸ்ரீஸ்கந்தராசா
2.வ/வ/34 திரு.இராசையா கனகரட்ணம்
3.வ/வ/43 திரு.வேலுப்பிள்ளை செந்தில்நாதன்
4.வ/வ/129 திரு.கதிர்காமு வல்லிபுரநாதன்
5.வ/வ/146 திருமதி.நாகமுத்து பெரியதம்பி
6.வ/வ/150 திரு.ஆறுமுகம் பரராசசிங்கம்
7.வ/வ/158 திரு.கந்தையா இராசதுரை
8.வ/வ/163 திரு.அதிரியாம்பிள்ளை அலோசியஸ்
9.வ/வ/177 திருமதி.பொன்னுப்பிள்ளை செல்லத்தம்பி
10.வ/வ/190 திரு.தருமலிங்கம் நகுலேந்திரராசா
11.வ/வ/221 திரு.நாகேஸ் இரத்தினராசா
12.வ/வ/227 திரு.சின்னையா செல்வராசா
13.வ/வ/238 திரு.முருகர் தில்லையம்பலம்
14.வ/வ/344 திரு.அருளம்பலம் கனகசிங்கம்
15.வ/வ/349 திருமதி.ராதாலட்சுமி ஜெகநாதன்
16.வ/வ/353 திரு.சந்தனம் சிவரத்தினம்
17.வ/வ/381 திரு.நல்லதம்பி தியாகராசா
18.வ/வ/437 திரு.மாணிக்கம் வரதராசா
19.வ/வ/446 திரு.இரத்தினம் செல்வநாயகம்
20.வ/வ/449 திருமதி.குணேஸ்வரி சிவபாதசுந்தரம்
21.வ/வ/457 திரு.இராமலிங்கம் இந்திரராசா
22.வ/வ/467 திரு.கார்த்திகேசு சிவலிங்கம்
23.வ/வ/470 திரு.செல்லப்பா தம்பிராசா
24.வ/வ/474 திரு.அப்பாப்பிள்ளை இராசரத்தினம்
25.வ/வ/498 திருமதி.அபியாம்பிகைஅம்மாள் சுப்பிரமணியம்
26.வ/வ/515 திரு.காசிப்பிள்ளை அமிர்தலிங்கம்
27.வ/வ/530 திரு.கிருஷ்ணன் தேவசுதன்
28.வ/வ/600 திரு.சபாரத்தினம் பஞ்சவர்ணம்
29.வ/வ/617 திரு.அருணாசலம் காத்தலிங்கம்
30.வ/வ/619 திரு.செல்லையா வில்வராசா
31.வ/வ/624 திரு.கதிரவேலு சின்னையா
32.வ/வ/644 திரு.மயில்வாகனம் விமலானந்தன்
33.வ/வ/693 திரு.நாகலிங்கம் தர்மராஜா (முற்றும்)

# குரு மாற்றம்



## சிம்மம்

**மகம் , பூரம்; உத்திரம் 1ஆம் பாதம்**

அன்பார்ந்தசிம்ம இராசி வாசகர்களே! எதிலும் முன்கோபியாகச் செயல்படும் உங்களுக்குப் பொறுமையும் நிதானமும் இனி மிகவும் அவசியம். ஏனென்றால் உங்களுக்கு ஏழரைச் சனி தொடங்கியிருக்கிறது. அதுமட்டுமன்றி தன ஸ்தானமான 2ஆம் வீட்டில் சஞ்சரித்த குரு பகவான் வரும் 19-09-2005 முதல் 3ஆம் வீட்டில் சஞ்சாரம செய்ய உள்ளார். குரு பகவான் 3இல் சஞ்சரிக்க உள்ளதால் தவிர்க்க முடியாத பல சங்கடங்கள் ஏற்படும். நீங்கள் எடுக்கும் முயற்சியில் தடையும் தாமதமும் உண்டாகும். பண விஷயத்தில் கடுமையான சோதனைகள் ஏற்படும். உங்கள் பலமும் வலிமையும் குறையும். எதிரிகளைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. எந்த வகையில் பாதகமான பலன் வரும் என எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு கடுஞ்சோதனைகளை ஏற்படுத்தககூடிய காலமாக இருந்து வரும். கடன்கள் மேலோங்கும். மன அமைதி குறையும். இராகு 8ஆம் இடத்திலும் கேது 2ஆம் இடத்திலும் 21-09-2006 முடிய சஞ்சாரம் செயவதால் குடும்ப வாழ்வில் கூட ஒற்றுமை இல்லாத நிலை உண்டாகும். பஞ்சமாதிபதியான குரு பகவான் 3ஆம் வீட்டில் சஞ்சரிப்பதன் மூலம் உங்கள் வாழ்வில் இடையூறுகள் அதிகமாவது மட்டுமன்றி சுபகாரியங்களும் தடைப்படும். நீங்கள் மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டிய காலமாகும்.

### ஆரோக்கியம்

உடல் ஆரோக்கிய ரீதியாகப் பாதிப்புக்கள் உண்டாகும். குறிப்பாக ஜலத் தொடர்பானவற்றால் பாதிப்பும், மனைவிக்கு கர்ப்பக கோளாறும், புத்திரர்களால் மனச்சஞ்சலமும் உண்டாகும். அடிக்கடி விடுப்பு எடுக்கவும் நேரிடும். மருத்துவச் செலவுகள் அதிகமாக உண்டாகும. வரவுக்கு மீறிய செலவுகளால் பணப் பற்றாக்குறை ஏற்பட்டு கடன்களைப் பெற நேரிடும். பழைய தெம்பும் மனமகிழ்ச்சியும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து, சோர்வும் சோகமுமாகவே காட்சியளிப்பீர்கள்.

### செல்வம், செல்வாக்கு

செல்வச் சேர்க்கை ஏற்பட வழியில்லை. இக்காலத்தில் பொருளாதார நெருக்கடிகளும் வீண் விரயச் செலவுகளும் உண்டாகும். சேமிப்புக்கள் கரையும். பற்றாக்குறைகளால் கடன் வாங்க நேரிடும். பழைய கடன்களால் விரோத மனப்பான்மை வளரும். எந்தவொரு செயலைச் செய்தாலும் அலைச்சல், டென்ஷன் உண்டாகும். பூர்வகச் சொத்து, வம்பு, வழக்குகளிலும் கூட இழுபறியான நிலையே காணப்படும். சில சமயம் வரவேண்டிய பணம் தாமதித்து வரும். எந்தவொரு முயற்சியும் தாமதித்தே நடைபெறும். பொருளாதார நிலையில ஓரளவு வருமானம் வரும். எந்தவொரு காரியத்திலும் பொறுமையாக ஈடுபட்டால் நன்மையுண்டு. குடும்பம் நடத்தவே மிகுந்த சிரமம் உணடாகும். நிதானம் தேவை.

### குடும்பச் சூழ்நிலை

குடும்ப வாழ்வில் நிம்மதி இருக்காது. மனதில் அதிகமான கவலைகளும் கணவன் - மனைவியிடையே உறவில் பிரிவும் மனவேறுபாடுகளும் தோன்றும். பற்றாக்குறையால் தடுமாறுவீர்கள். பொருள் நஷடமும், வேணடிய ஒருவரை இழக்கவும நேரிடக்கூடும். வண்டி, வாகனம் பழுதடையும். வீண் செலவுகளை ஏற்படுத்தும்.சகோதரர்களுக்குள் போட்டிகளும் பொறாமைகளும உண்டாகும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படும். பூர்வகச் சொத்துக்களில் சிறு சிறு செலவுகளை உண்டாக்கும். நண்பர்களால் சில பிரச்சினைகள் உண்டாகும். பொருளாதார நிலை சரியாக அமையாது. எடுககும் முயற்சிகள் வெற்றி தராது.

### உத்தியோகஸ்தர்களுக்கு

உத்தியோக நிலையில் பலவிதமான சங்கடங்களையும் குழப்பங்களையும் சந்திக்க நேரிடும். யாரோ செய்த தவறுக்கு நீங்கள பொறுப்பாளியாகி தண்டனை அடைய நேரிடுவது மனதில் விரக்தியை ஏற்படுத்தும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு தடைப்படும். எதிர்பாராத திடீர் வேலைமாறுதல் உத்தரவால் அதிர்ச்சியடைவீர்கள். எந்தவொரு செயலையும் குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் முடிக்க இயலாது. சிலர் இங்கும் அங்கும் அலைய நேரிடும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை அமையப் பெறாது அலைச்சல் உண்டாகும். மனதில் சிறு சிறு குழப்பம் நேரிடும். புரியாத வேலை தெரியாத ஊர் எனக் குழப்பம் அடைவீகள்.

### தொழிலதிபர்களுக்கு

செய்கின்ற தொழில், வியாபார நிலையில் கடுமையான சோதனைகளும், போட்டி, பொறாமைகளும் ஏற்பட்டு இலாபம் குறையும். சிலர் பொருள்கள் முடக்கம் ஏற்பட்டு பெரிய அளவில் கடனாளியாவார்கள். வீண் வரயம், வேலையாட்களால் அனுகூலமற்ற நிலை, அரசு மூலம் எதிர்பாராத கெடுபிடி ஆகியவற்றைச் சந்திக்க நேரும். வெளிய,ர்ப் பயணங்களைத் தவிர்ப்பது மிகவும் உத்தமம். எடுக்கின்ற முயற்சிகள் வெற்றியை ஏற்படுத்தாது. எதிரிகளின் பலம் கூடி, உங்கள் தைரியமும் தன்னம்பிக்கையும் குறையும்.

### மங்கையருக்கு

உங்களுக்கு வயிற்றுக் கோளாறுகள், மாதவிடாய்க கோளாறுகள், உடல் உபாதைகள், மனச் சோர்வு ஏற்படும். மணவாழ்வு மகிழ்ச்சி தராது. பலரிடம் ஏச்சும் பேச்சும் கேட்க நேரிடும். கணவருடன் ஒத்துபோக முடியாது. திருமண காரியமும் தடைப்படும். உற்றார், உறவினர்களால அதிகமான மனவருத்தம் உண்டாகும்.

### கல்விநிலை

கல்வியில் மந்தமான நிலையே காணப்படும். கடினமான உழைப்பையும் முயற்சியையும் மேற்கொண்டு கண்ணும் கருத்துமாக இருப்பது நல்லது. நண்பர்களிடம் பழகுவதில் மிகவும் எச்சரிக்கை தேவை. செய்யாத தவறுக்கு உங்களை ஆளாக்கி விடுவார்கள்.

### கலைஞர்களுக்கு

உஙகளுக்குத் தொழில், பொருளாதார நிலையில் நெருக்கடியான நிலை உண்டாகி தனவரவுகள் தடைப்படும். புதிய வாய்ப்புகளில் பிரகாசிக்க முடியாத நிலையும், இசை, பாடல், சிற்பம், ஓவியத் துறையைச் சார்ந்தவர்கள் போதிய வாய்ப்பு இல்லாமலும் மந்த நிலையை அடைவார்கள். மேலும் மேலும சோதனைகளையும் மறைமுக எதிரிகளின் தொல்லைகளையும் சந்திக்க நேரிடும். எதிலும் தடையும் தாமதமும் ஏற்படும். தேவையில்லாமல் பெரிய மனிதர்களைப் பகைத்துக்கொள்ள நேரிடும்.

### உழவர்களுக்கு

வேலைப்பளுவும் பெருமளவில் பாதிப்பும் உண்டாகும். உழைத்ததற்கேற்ற பலன் இல்லையே என்று வருத்தப்படுவீர்கள். எலிகளும், புழு பூச்சிகளும் அதிகத் தொல்லையை ஏற்படுத்தும். ஆழ்கிணறு தோண்டுவதைத் தள்ளிப் போடுவதன் மூலம் வீண விரயம் குறையும். உங்களின் விளை பொருள்கள் நல்ல விலைக்குப் போகாது. பயிர்த தொழிலில் இருந்த கஷ்டங்கள், நஷ்டங்கள் அதிகமாகும்.

### இளைஞர்களுக்கு

உங்களுடைய முயற்சிகள் விழலுக்கிறைத்த நீராகப் போவதால் மனம் உடைந்து போவீர்கள். வேலை செய்யும் இடத்தில் யாருடனும் அளவுக்கு அதிகமாக பழக்கம் வைப்பது தற்போது ஆபத்தை விலை கொடுத்து வாங்குவது போலாகும். யாரும் உதவ மாட்டார்கள். திறமைக்கேற்ற பாராட்டுக்கள் கிட்டாது. நண்பர்களுடன் பிரச்சினை ஏற்படும்.

### குரு பகவான் துலாத்தில் சித்திரை நட்சத்திரத்தில் 19-09-2005 முதல் 20-10-2005 வரை

குடும்ப வாழ்வில் கணவன் - மனைவியிடையே எப்பொழுதும் சண்டையும், சாதகமற்ற போக்கும் சிலசமயம் வாக்குவாதங்களில பிரிந்து தாய்வீட்டுக்குச் செல்லும் நிலையும் உண்டாகும். பொருளாதார நிலை சாதகமாக அமையப் பெறாததால் கடன் தொல்லைகள் அதிகமாகும். பற்றாக்குறைகளால் அவதிப்பட நேரிடும். மிகவும் நெருக்கமானவர்களே உங்களிடம் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு அரசுமூலம் சோதனைகளும் மறைமுக எதிரியின் தொல்லைகளும் ஏற்படும். பதவி, ஊதிய உயர்வு தடைபபடுவதுடன் அதிகாரிகளின் கெடுபிடியும், அடிக்கடி விடுப்பு எடுக்கும் நிலையும் உண்டாகும். புதிய வேலை அமையாது கூட்டுத் தொழிலில் சிலர் அனுகூலமற்றவற்றைச் சந்திக்க நேரிடும். வெளி வட்டாரப் பழக்கத்தால் மாணவர்களுக்குக் கெட்ட நண்பர்களிடம் பழக்கம் உண்டாகும். உடல நலனில் முழுக்கவனம் செலுத்தவேண்டும். அதிகமான மருத்துவச் செலவுகளும் தேவையற்ற பிரச்சினைகளும் உண்டாகும. வெளியூர்ப் பயணம் சோர்வை ஏற்படுத்தும். அரசியலில் தலைவர்களிடம் பகை ஏற்படும். விவசாயிகளுக்கு புழு பூச்சிகளால் மகசூலில் சேதம் ஏற்படும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 21-10-2005 முதல் 26-12-2005 வரை

உங்களுக்கு ஏழரைச் சனி நடைபெறுகிறது. ஜென்மச் சனியும் தொடர்வதால் உடல்நலம் மிகவும் சோர்வடையும். நரம்பு, ஜலத் தொடர்பானவற்றால் பாதிப்பு உண்டாகும். சிலருக்கு சிறு அறுவை சிகிசசையும் செய்ய நேரிடும். மனைவி வழியிலும அதிகமான உடல்நல பாதிப்பு உண்டாகும். பிள்ளைகளால் மன அமைதி குறையும். உற்றார், உறவினர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். டென்ஷன், சோர்வும் பாடாய்ப் படுத்தும். சிலருக்கு தந்தை வழியில் அதிகமான மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ள நேரிடும். பொருளாதார நிலை சிறப்பாக அமையாது. தேவையற்ற செலவுகளைத் தவிர்க்க முடியாது. வரவேண்டிய பாக்கிகள் வராமல் முட்க்கமாகும் பணம் இருந்தாலும் அதனை உபயோகப்படுத்த முடியாத நிலை ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் அதிகக் கவனம் தேவை. யாருக்கும் ஜாமீன் தருவது கூடவே கூடாது. விவசாயிகளுக்கு புழு பூச்சிகளால் அதிக சேதம் ஏற்படும். அரசியலில நெருக்கமானவர்களால் அவமானப்படவும் நேரிடும். மாணவர்கள் கடுமையான முயற்சியை மேற்கொள்ளவேண்டும்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 27-12-2005 முதல் 02-03-2006 வரை

உடல்நலம் பாதிப்படையக்கூடும். பொருளாதார நிலையில் பணவரவுகள் தடைப்படும். திட்டமிட்ட செயலைத் தவிரமாக செயல்படுத்த முடியாது குடும்ப வாழ்வில் மனநிம்மதி இருக்காது. கணவன் - மனைவியிடையே அடிக்கடி சண்டை, சச்சரவுகள் ஏற்படும. தொழில், வியாபார நிலையில் முழுத்திருப்தி இருக்காது. போட்டி, பொறாமைகளை எதிர்கொள்ள நேரிடும. உங்களுடைய பலம் குறைந்து எதிரிகளின் பலம் மேலோங்கியிருக்கும் காலமாக அமையும். வளமும் பலமும் குறைந்து மனக்கவலைகளால் உடல் நலம் பாதிப்படையும். நெருக்கமானவர்கள் கடனால் பகையாளியாக மாறுவார்கள். வீண் செலவுகள், பிரயாணங்கள், அலைசசல்கள், டென்ஷன் உண்டாகும். பணம் பல வழியில் செலவாகும். அசையாச சொத்து வகையில் கோர்ட், கேஸ் என்று அலையவும் நேரிடும். திருமண சுபமுயற்சிகள் எதிர்பாராத விதமாக தடைப்படும்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 19-08-2006 முதல் 20-10-2006 வரை

நீங்கள் இக்காலத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். உடல்நலனில் முழுக்கவனம் செலுத்துவது உத்தமம். சிலருக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு நோயின் அளவு உயர்வடையலாம். அதிகமான மருத்துவச் செலவுகள் உணடாகும். பெண்களுக்கு மாதவிலக்கு சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். சிலருக்கு கருச்சிதைவும் கூட ஏற்படலாம். எனவே அதிகக் கவனம் தேவை. புத்திரர்களாலும் மன உளைச்சல் ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் தேவையில்லாத சிக்கல்களில் சிக்கிக்கொள்ள நேரிடும். சிலர் முன் விரோதத்துடன் செயல்படக்கூடும்.

# உங்களுக்கு எப்படி?

**19-09-2005 முதல் 20-10-2006 வரை**

அடிக்கடி பயணம் ஏற்பட்டு அலைச்சலும், களைப்பும் அடைவீர்கள். மனைவி, குழந்தைகளும் நலமாக இருக்கமாட்டார்கள். ஏதேனும் ஒரு வகையில் சோதனைகள் தொடர்கதையாக அமையும். பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகள், பிரசவத்தில் சிக்கல், அறுவைச் சிகிச்சை போன்ற பலவிதமான தொந்தரவுகளும் உண்டாக வழி ஏற்படும. தொழில், வியாபார நிலை மனதில் கவலைகளை ஏற்படுத்தும். மந்தமாகவும் இலாபக் குறைவாகவும் அமையும். அதிக போட்டி, பொறாமைகளைச் சந்திக்க நேரிடும். சிலர் சிறிது காலத்திற்கு தொழிலை நிறுத்தி வைக்க நேரும். பொருள் தேக்கம் ஏற்படும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் கூட்டாளிகளை அனுசரித்துப் போக முடியாத நிலை உருவாகும். கமிஷன், ஏஜென்ஸி, கொண்ட்ராக்ட் போன்றவை இலாபம் தராது. உத்தியோக நிலையில் கடின உழைப்பினை மேற்கொண்டாலும் ஊதிய உயர்வோ, பதவி உயர்வோ ஏற்படாது.

### குரு பகவான் வக்ர நிலையில் 03-03-2006 முதல் 04-06-2006 வரை

உங்களுக்கு இக்காலம் அவ்வளவு ஏற்றமாக அமையாது. ஓரளவிற்கு சுமாரான பலனகளே ஏற்படும். எதிர்பாராத சிறு சிறு செலவுகளை உண்டாக்கும். உடல்நலம் உஷ்ண சம்பந்தமாக சிறு சிறு பாதிப்பை ஏற்படுத்தி மறையும். சிறிதளவு மருத்துவச் செலவுகளையும் சந்திக்க நேரிடும். பொருளாதார நிலையில் தனவரவுகளில் தடையும் பற்றாக்குறையும் உண்டாகும். கடன் தொல்லை அதிகமாகும. தொழிலும், வியாபாரமும் சங்கடமான நிலையினைச் சந்திக்கும். மறைமுக எதிரிகளின் தொல்லையால் மனக்கவலைகள் உண்டாகும். வண்டி, வாகனம் செலவை ஏற்படுத்தும். குடும்ப வாழ்வில் போட்டா போட்டிகளால் ஒற்றுமை சுமாராகத்தான் இருந்து வரும். கணவன் - மனைவியிடையே சிறு பூசல்கள ஏற்படக்கூடும். திருமண சுபகாரியம் எதிர்பாராமல் தடைக்குப்பின் முடிவாகும். கூட்டுத் தொழில் சுமாராக அமையும். உத்தியோக நிலையில் தற்போது சீரான நிலையே இருக்குமாயினும் விரும்பிய இடமாறுதல் அமையப்பெறும். மாணவர்களின் கல்வியில் மேன்மை உண்டாகும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 05-06-2006 முதல் 18-08-2006 வரை

இக்காலத்தில் நெருங்கியவர்கள் மறைமுக எதிரிகளாவார்கள். உடல்நலம் சிறப்பாக இருக்காது. குறிப்பாக, மனைவிக்கு கர்ப்பக் கோளாறுகள், மாதவிடாய்க் கோளாறுகள் உண்டாகும். புத்திரர்களுக்கு உடல் அசதியும் சோர்வும் உண்டாகும். தொழில், வியாபாரம் பலத்த சோதனைகளை ஏற்படுத்தும். பண முடக்கமும் நலிவும் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராமல் அரசு மூலம் சோதனை உண்டாகும். தொழிலாளர்களும் வேலையாட்களும் கூடச் சம்பளப் பிரச்சினையை ஏற்படுத்துவார்கள். புதிய வேலை கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் குறையும். வெளியூர்ப் பயணத்தைத் தவிர்பபது உத்தமம்.

**ஜோதிட மேதை**
**பாலமுருகன்**

### நட்சத்திரப் பலன்கள்

**மகம்:** நீங்கள் எடுக்கும் பல முயற்சிகளில் தடையும் தாமதமும் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் முழுமையாக முடிக்க முடியாது. பொருளாதாரத்தில் பண வரவுகள் தடைபடும். கடன் தொல்லைகள் உண்டகும். யாரையும் நம்பி வாககு கொடுப்பதோ ஜாமீன் தருவதோ வீண் பிரச்சினைகளை ஏற்படுத்தும். எனவே மிகவும உஷாருடன் செயல்பட வேண்டும்.

**பூரம்:** எடுக்கும் செயல்களை ஒருமுறைக்கு பலமுறை சிந்தித்துச் செயல்படுவதன் மூலம் வீண் செலவுகளைக் குறைத்துவிட முடியும். தொழில், வியாபாரத்தில் போட்டி, பொறாமைகளும் பொருள் தேக்கமும் உணடாகும். இலாபம் குறையும். கணவன் - மனைவியிடையே தேவையற்ற சண்டை, சச்சரவுகள் தோன்றும். சிக்கனமாகச் செலவு செய்வது மிகவும் அவசியம். வெளியூர்ப் பயணங்களில் அதிக அலைச்சலும் டென்ஷனும் உண்டாகும்.

**உத்திரம் 1ஆம் பாதம்:** கடந்த வருடத்தின் நற்பலன்களை இவ்வாண்டு எதிர்பார்க்க முடியாது. உடல் நலம் சோர்வடையும். குடும்பத்தில் குழப்பமும் திருமண சுபகாரியத் தடைகளும் உண்டாகும். அசையாச் சொத்து வகையில் வீண் செலவுகளும் வம்பு வழக்குகளும் உண்டாகும். வீண் பயணங்களும் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் மந்தமான நிலை அடைவீர்கள்.

**பரிகாரம்:** உங்கள் இராசிக்கு ஏழரைச் சனி தொடங்கி நடைபெறுவதால் தொடர்ந்து சனி பகவானுக்கு எள் முடிந்த எண்ணெய் விளக்கேற்றி சனி சுலோகம், சனி மந்திரம், சனி காயத்ரியை ஜெபித்து வருவதும், 3இல் குரு பகவான் சஞ்சரிப்பதால் ஏழை பிராமணர்களுக்கு உங்களால் இயன்ற பொருளுதவி, ஆடை, தானம் வழங்கி, குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவதும நல்லது. இராகு, கேதுவும் சாதகமற்று சஞ்சரிப்பதால் அம்மன் வழிபாடு, சரபேஸ்வரரைத் தரிசிப்பது, விநாயகரைத தரிசிப்பது போன்றவை குடும்ப வாழ்வில ஏற்படும் இன்னல்களைக் குறைத்து ஏற்ற மிகு பலன்களை ஏற்படுத்தும.

(தொடரும்...)





# ஆஷஸ் தொடரில் வோணின் ஆதிக்கம் ஸ்டிராஸ் 7 ஆவது சதம்

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா கிரிக்கெற அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின் ஐந்தாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஓவல் மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோண நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.


இங்கிலாந்து 7 விக்கெற் இழப்பிற்கு 319 ஓட்டங்களுடன் உள்ளது. ஷேன் வோண 5 விக்கெற்றுக்களை கைப்பற்றி சுழல் ஜாலம காட்டினார். பதிலுக்கு ஸ்டிராஸ் சதம் அடிக்க இங்கிலாந்து சரிவில் இருந்து மீண்டது.



ஆரம்பத்தில் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத், பிரட்லீ ஆகியோர் வீசிய பந்துகளை இங்கிலாந்தின் தொடகக ஆட்டக்காரர்களான டிரஸ் கோதிக், ஸ்டிராஸ் விளாசித் தள்ளினார்கள்.

இதனால் அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங்கால வேகப்பந்து வீச்சு நிறுத்தப்பட்டு சுழல்பந்து வீச்சு கொண்டுவரப்பட்டது. சுழல்பந்து வீச்சில் அசகாயசூரரான வோண் மளமளவென்று விக்கெற்றுக்களை கைப்பற்றினார். இதனால் இங்கிலாந்து ஆடடம் காணத் தொடங்கியது. வோணின் பந்து வீச்சில் டிரஸ்கோதிக் 43 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் மைக்கல் வோண் 11 ஓட்டங்களுடனும், பெல் ஓட்டம் எதனையும் பெறாமலும், பீற்ர்சன் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

தொடக்க ஆட்டக்காரரான ஸ்டிராஸ் 129 ஓட்டங்களை எடுத்துள்ளபோதும் இருவரும் வோணின் பந்திலே ஆட்டமிழந்து சென்றார். பிளின் ,ரொப் 72 ஓட்டங்களுடன் மெக்ராத்தின் பந்து வீச்சிலும், கொலிங்



வூட் 7 ஓட்டங்களுடன ரெய்ட்டின் பந்து வீச்சிலும் ஆட்டமிழந்து சென்றனர்.

ஜோன்ஸ் 21 ஓட்டங்களுடனும், கைல்ஸ் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

நேற்று அதிகாலை வரை இங்கிலாந்து அணி 7 விக்கெற் இழப்பிற்கு 319 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இங்கிலாந்து அணி சார்பாக அபாரமாக ஆடிய ஸ்டிராஸ் டெஸ்ட் போட்டியில் தனது 7 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்துள்ளார்.

இத்தொடரில் வோண் ஐந்து விக்கெற்றுக்களை கைப்பற்றியதன் மூலம் 31 ஆவது முறையாக 5 விக்கெற்றுக்களை வீழ்த்தி அதிக முறை 5 விக்கெற்றுக்களை வீழ்த்தியவர்களின் பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

46 முறை 5 விக்கெற்றுக்களை கைப்பற்றி இலங்கையின் முரள்தரன் முதலடத்திலும், 36 முறை கைப்பற்றி நியூஸிலாந்து வீரர் ஹாட்லி இரண்டாவது இடத்திலும் உள்ளனர். (அ-19)

## விளையாட்டு செய்திகள்

# நான் டெண்டுல்காரின் ஆயுட்கால ரசிகை ரெனிஸ் வீராங்கனை சானியா தெரிவிப்பு

நான் டெண்டுல்காரின் ஆயுட்கால ரசிகை என்று இந்திய ரெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா கூறியுள்ளார்.

இந்திய ரெனிஸ் நட்சத்திரம் சானியா மிர்சா அமெரிக்காவில் யு.எஸ்.ஓபன் ரெனிஸ் உட்பட பல்வேறு போட்டிகளில் விளையாடி விட்டு இந்தியா திரும்பினார். நேற்று முன்தினம் அவர் சொந்த ஊரான ஐதராபாத்துக்கு வந்து நிருபர்களுக்குப் பேட்டியளித்தா. அப்போது ரெனிஸ் பற்றி அவரிடம் பல கேள்விகளை நிருபர்கள் கேட்டுவிட்டு, பிறகு கிரிக்கெற் பற்றி வினா எழுப்பினார்கள்.

அப்போது சானியா மிர்சா மிகவும் உற்சாகமாக கிரிக்கெற் பற்றித் தனது கருத்துக்களை வெளியிட்டார்.

'கிரிக்கெற் மக்களிடம் மிகவும் புகழ் பெற்றுத் திகழ்கின்ற ஒரு விளையாட்டாக உள்ளது. அதனுடன் நம் நாட்டைப் பொறுத்த வரையில் ரெனிஸ் போட்டியிட முடியவில்லை. அதுபோல கிரிக்கெற் வீரர்களுக்கு இருக்கும் புகழோடு நானும் போட்டியிட முடியாது என்று அவர் கூறினார்.

அதன்பிறகு, நான் டெண்டுல்காருடைய தீவிர ரசிகை. அவர் எப்போது கிரிக்கெற் போட்டியில் புகழ் பெறத் தொடங்கினாரோ அப்போதிருந்தே நான் அவருடைய ஆயுட்கால ரசிகை ஆகிவிட்டேன்' என்றும் சானியா குறிப்பிட்டார்.



சமீபத்தில் இந்திய கிரிக்கெற் அணியின் செயல்பாடு எப்படி இருக்கிறது என்று ஒரு கேள்வியை நிருபர்கள் சானியாவிடம் கேட்டார்கள். அதற்கு அவர் பதிலளிக்கையில்,

நான் அப்போது அமெரிக்காவில இருந்தேன். இந்திய அணி விளையாடுகிற கிரிக்கெற் போட்டிகளின் விவரங்களை அறிந்து கொள்வதில் விருப்பமாக இருந்தேன். சில தோல்விகளை கேள்விப்பட்டபோது கவலையாக இருந்தது என்று கூறினார்.

ஐதராபாத்தில் சானியா மிர்சாவை வரவேற்கிற வகையில் பெரிய பதாகைகள் அவருடைய ரசிகர்களால் வைக்கப்பட்டிருந்தன. 'கிரிக்கெற் மோகத்தை விரட்டியடித்த சானியாவுக்கு நன்றி' என்று பதாகைகளில எழுத்தப்பட்டிருந்தன. இதுகுறிதது சானியாவிடம் நிருபர்கள் சுட்டிக்காட்டிக் கேட்ட போது, அவர் எதுவும் சொல்லாமல் சிரித்துக் கொண்டார்.

நான் கண்டிப்பாக உலகில் நம்பர் வண இடத்தைப் பிடிப்பேன். அந்த நம்பிக்கை




எனக்கு இருக்கிறது. ரெனிஸ் மட்டுமன்றி வாழ்க்கையில உள்ள வேறு சில துறைகளிலும் முதலிடம் பிடிக்கும் இந்தியப் பெண்மணியாக நான் சாதித்துக்காட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் எனவும் சானியா மிர்சா பேட்டியின் போது குறிப்பிட்டார்.

அப்படி நான் நம்பர் வணணாக வருவதற்கு இன்சா அல்லாவின் (கடவுளின்) கிருபை இருக்க வேண்டும். கடவுளின் ஆசி இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்றும் சானியா மிர்சா நம்பிக்கையோடு கூறினார்.

யு.எஸ்.ஓபன் ரெனிஸில் நான் நான்காவது சுற்று ஆட்டத்தில் மரிய சரபோவாவடம் தோற்றேன். அவர் எவ்வளவோ போட்டிகளில் விளையாடி நிறையப் பரிசுகளை வென்றவர். நான் என்னை மேலும் வளர்த்துக் கொண்டு இன்னும் பல போட்டிகளில் சரபோவாவை எதிர்த்து விளையாட முடியும் என்று நினைக்கிறேன்.

எனக்கு சில காயங்கள் உடலில் ஏற்படடன. இது எல்லா வீரர்கள், வீராங்கனைகளுக்கு நிகழக்கூடியதுதான். எனவே அதைப் பற்றி அதிகம் நான் கவலைப்படவில்லை என்றும் சானியா மிர்சா கூறினாா.

ரெனிஸ் விளையாடும்போது சானியா மிர்சா கவர்ச்சியாக குட்டைப்பாவாடை அணிந்து கொள்வது வழக்கம். இதற்கு சில தீவிரவாத முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஒரு முஸ்லிம்பெண் இப்படி ஆயிரக்கணக்கானவர்கள் முன்பு உடல் தெரியும்படி ஆடை அணிந்துகொண்டு விளையாடுவது இஸ்லாமிய நெறிமுறைக்கு எதிரானது என்று அவர்கள் கண்டனம் தெரிவித்தார்கள்.

இதுபற்றி சானியா மிர்சாவிடம் இந்தப் போட்டியின்போது நிருபர்கள் கேட்டார்கள். அதற்கு பதிலளிக்கவோ கருத்துச் சொல்லவோ முடியாது என்று சானியா மிர்சா மறுத்து விட்டார். (அ-19)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை சிறப்பிக்கும் வண்ணம் வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய வழிகாட்டலில் நடாத்தப்படும் காரைநகர் மேற்கு பிரதேச முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா இன்று காலை 9.00 மணிக்கு காரைநகர் தங்கோடை நாகம்மாள் கோயில் ஆலய முன்றலில் ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளர் எ.கணேசானந்தராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிழ்வில் பிரதமவிருந்தினராக காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தீவக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.கணபதி, ஓய்வு பெற்ற ஆசிரியர் எஸ்.இராமுப்பிள்ளை, கிராம சேவையாளர் எஸ்.சண்முகசுந்தரம், சனசமூக நிலைய உத்தியோகத்தர் எஸ்.மகேந்திரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக தீவக வலய இணைப்பாளர் எ.யாழினி, காரைநகர் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையப் பிரதேச தலைவர் எம்.திருக்குமார் கலந்துகொள்ளவுள்ளனர். (9)

# 13 ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பினர்

(மன்னார்)

தலைமன்னாருக்கு அருகே உள்ள மணல் திட்டியில் தவித்து நின்றிருந்த 13 ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்திலிருந்து படகோட்டிகள் மூவருடன் தலைமன்னார் அருகே உள்ள மணல் திட்டிக்கு 13 பேரும் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு வந்திறங்கினர்.

3 ஆயிரம் ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரை ஒவ்வொருவரும் படகுக்கு பணத்தை செலுத்தி வந்துள்ளனர்.

இந்நிலையில், ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் இவர்களை மறுநாள் காலை கைது செய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ற-4)



கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் மாலை சவுதி புறப்படவிருந்த, குண்டுப் புரளிக்கு இலக்கான விமானம்.

குண்டுப்புரளியை அடுத்து அவசரகால கதவுகள் ஊடாகப் பயணிகள் முண்டியடித்து வெளியேறியதில் ஒரு பெண்மணி உயிரிழந்ததுடன் சுமார் 90 பேர் வரை காயங்களுக்குள்ளானமை தெரிந்ததே.

# கந்தசஷ்டி விரத காலத்தில் தேர்தலை நடத்த வேண்டாம்

## இந்துமாமன்றம் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை கந்தசஷ்டி விரத காலத்தில் நடாத்தவதற்கு தீர்மானிக்க வேண்டாமென அகில இலங்கை இந்து மாமன்றம் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இது விடயம் தொடர்பில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் இருக்கும் இந்துக்கள் அனுஷ்டிக்கும ஒரு முக்கிய விரதம் கந்தசஷ்டி விரதமாகும். நாள் முழுவதும் அவர்கள் பூசைகள் பலவற்றுடன் இந்த விரதத்தை முறையாக அனுஷ்டிப்பர்.

நவம்பர் 2ஆம் திகதி ஆரம்பமாகும் கந்தசஷடி விரதம் 8ஆம் திகதி வரை தொடரும.

எனவே, ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை இககாலகட்டத்திற்குள் நிர்ணயிக்க வேண்டாம் என இந்நாட்டில் வாழும் இந்து மக்கள சார்பில் தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# நியாப் -II திட்டத்தில் ரூ.11 இலட்சத்தில் வட்டு. தெற்கில் பொது மண்டபம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டு.தெற்கு மையக் கிராமத்தில் பல நோக்கு பொது மண்டபம் ஒன்றை நியாப் II தடடத்தின் கழ் அமைப்பதற்கான அனுமதிக் கூட்டம் நேற்றுமுன்தினம் பி.ப 4.00 மணியளவில் வட்டுத்தெற்கு கிராம அலுவலகர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வலிமேற்கு பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி வானுமதி இரவீந்திரன் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ரி.சோதிநாதன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.தேவநாயகம், சமூக வலுவூட்டாளர் க.கண்ணபிரான், வட்டு தெற்கு கிராம அலுவலர் எஸ்.நாகரத்தினம். மற்றும் வட்டு தெற்கிலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டு தெற்கு, செம்பாட்டன் தோட்டம், அம்பாள் சனசமூக நிலையத்தின் காணிக்குள் இம் மணடபம் அமைபபதற்கு வட்டு தெற்கில் வசிக்கும் மக்களின விருப்பப்படி தீர்மான் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி மண்டபம் அமைப்பதற்கு நியாப் திட்டத்தின் கீழ் பதினொரு இலட்சம் ரூபா நீதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்று நிர்மாணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை

என். சொக்கன் 17

திடீரென்று தங்கள் முன் தோன்றி, இப்படி முரட்டுத்தனமாக விசாரிக்கிற அந்த மீசைக்கார னையும், அவனோடு வந்திருக்கும் ஆயுதம் தாங்கிய மற்றவர்களையும், அவர்கள் விநோதமாகப் பார்த்தார்கள். அவர்களுடைய குழப்பத்தைப் புரிந்துகொண்ட அந்தக் குழுவின் தலைவன், தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்- 'என் பெயர் வீரப்பன்'

யார் இந்த வீரப்பன்? எதற்காக ராஜ்குமாரைப் பற்றி விசாரிக்கிறான் என்றெல்லாம் அவர்க ளுக்குப் புரிந்ததோ, இல்லையோ. ராஜ்குமார் பழைய வீட்டில்தான் இருக்கிறார் என்று மட்டும் அவர்கள் சொன்னார்கள்.

உடனே, வீரப்பன் அவர்களை அங்கேயே நிறுத்தி வைத்து விட்டு, பழைய வீட்டை நோக்கிச் சென்றான்.

வாசல் கதவு திறந்திருந்தது. வீரப்பன் உள்ளே நுழைந்த போது, தொலைக்காட்சியில் செய்தி களைப் பார்த்துக் கொண்டிருந்தார் ராஜ்குமார். சற்றுத்தள்ளி, அவருடைய மனைவி பர்வதம்மா, பாயில் படுத்திருந்தார்.



ராஜ்குமாரைத் திரைப்படங்களில் பார்த்திருக்கிறானோ, என்னவோ நேரில் பார்ப்பது, இதுதான் முதல்முறை. ஆகவே, 'ராஜ்குமார் எங்கே?' என்று வீரப்பன் நிச்சயமில் லாமல் கேட்கிறான்.

உடனே, சோஃபாவில் அமர்ந்திருந்த ராஜ்குமார், எழுந்து நிற்கிறார்.

நேராக அவரை நோக்கிச் சென்ற வீரப்பன், தன்னுடைய துபபாக்கியை அவர் முன் நீட்டினான். 'நான் தான் வீரப்பன். நீங்கள் இப்போது என்னுடன் வந்தாக வேண்டும்' என்றான். அதட்டலாக, உடனே சுற்றி இருந்த மற்றவர்களைப் பார்த்து, 'யாரும் சத்தம் போடக் கூடாது' என்று எச்சரித்தான்.

நிலைமையைச் சட்டென்று புரிந்துகொண்டவர், ராஜ் குமாரின் மனைவி பர்வதம்மாதான். வந்திருப்பது வீரப்பன் என்று தெரிந்ததும், படபடவென்று தமிழில் பேச ஆரம்பித் தார் அவர். 'நாங்கள் உனக்கு என்ன பாவம் செய்தோம்? நீ ஏன் அவரைக் கடத்தவேண்டும்? தயவு செய்து எங்களை விட்டுவிடுப்பா!'

பர்வதம்மாவின் கெஞ்சல்கள் காற்றில் படபடத்துக் கொண்டிருக்க, வீரப்பன் மீண்டும் ராஜ்குமாரைப் பார்த்து, 'சீக்கிரம் கிளம்புங்கள்' என்றான்.

வேறுவழியில்லாமல், தன் இருக்கையில் இருந்து எழுந்து கொண்டார் ராஜ்குமார். பதற்றமாக நின்றிருந்த தன் மனைவி பர்வதம்மாவுக்குத் தைரியம் சொல்லிவிட்டு, வீரப்பனுடன் புறப்படத் தயாரானார் அவர்.

இப்போது, வீரப்பனின் முகத்தில் இருந்த இறுக்கம், லேசாகத் தளர்கிறது. கிட்டத்தட்ட அழுகை தொனியில் பேசிக் கொண்டிருக்கும் பர்வதம்மாவைப் பார்த்து, 'கவலைப்படாதீங்க, நாங்க அவரை நல்லாப் பார்த்துப்போம். அவருக்கு எந்தக் கஷ்டமும் கொடுக்கமாட்டோம்' என்கிறான அவன். கூடவே, 'போலீஸைக் கூப்பிடாதீங்க, அப்புறம் உங்களுக்குத் தான் அநா வசியமா பிரச்சினை' என்றும் எச்சரிக்கிறான்.

பின்னர், தன்னிடம் இருந்த ஒரு ஒலி நாடாவை, பர்வதம்மாவிடம் கொடுக்கிறான் வீரப்பன். 'இந்த கேஸட்டை, கர்நாடக முதலமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள்' என்று சொன்னவன், சட்டென்று ராஜ்குமாரை அழைத்துக் கொண்டு வெளியேறுகிறான்.

வெளியே வந்ததும், ராஜ்குமாரைத் தவிர, அவருடைய உறவினர்களான கோவிந்தராஜு, நாகேஷ் மற்றும் நாகப்பா என்ற உதவியாளரையும் தன்னோடு அழைத்துச் செல்கிறான் வீரப்பன்.

அந்த ராத்திரி இருட்டில், அவர்கள் மெல்ல நடந்து மறைய, அவசரமாகத் தொலைபேசியைத் தேடி ஓடுகிறார் பர்வதம்மா.

இப்படியாக, 'ஆர்கேஷ் அறிக்கை'யின் முதல் கணிப்பு, அடுத்த சில மாதங்களுக்குள் நிஜமாகி விட்டது. கன்னடர்களின் நேசத்துக்குரிய நடிகர், டாக்டர் ராஜ்குமார், வீரப்பனால் கடத்தப்பட்டு விட்டார். (ஆர்கேஷின் பட்டியலில் இடம்பெற்ற முன்னாள் அமைச்சர் ஹெச். நாகப்பாவும் பின்னர் கடத்தப்பட்டார்).

அடுத்த அரை மணிநேரத்துக்குள், ராஜ்குமார் கடத்தப்பட்ட செய்தி, பெங்களூரில் இருக்கும் கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கும், அமைச்சர்கள் சிலருக்கும், காவல்துறை உயர் மட்ட அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொருவரும், 'நிஜமாகவா? நிஜமாகவா?' என்று கேட்டுக் கேட்டு மாய்ந்து போகிறார்கள். இது மட்டும் நிஜமாக இருந்துவிட்டால், அதன் விளைவுகள் என்னவாக இருக்குமோ என்று நினைக்கும்போது, எல்லோருக்கும் குலை நடுங்கு கிறது.

அந்த இரவில், முதல்வர் தலைமையில் அவசரக்கூட்டம் ஒன்று ஏற்பாடாகிறது. வீரப்பன் எதற்காக ராஜ்குமாரைக் கடத்தியிருப்பான். அவரை விடுவிப்பதற்கான வழிகள் என்னென்ன என்று அலசப்படுகிறது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பாலானவர்கள், ராஜ்குமாரைத் தான் குறை சொல்கிறார்கள். ஏற்கனவே போலீஸார் எச்சரித்திருந்ததும், அவர் ஏன் தொட்டகாஜனூருக்குப் போக வேண்டும்? அப்படியே போவதானாலும், போலீஸில் சொல்லிவிட்டுப் போகவேண்டியது தானே?

போலீஸின் எச்சரிக்கையை அலட்சியப்படுத்தியது, ராஜ்குமார் செய்த பெரும் தவறு. என்றாலும், அதைப் பற்றி இனிமேல் பேசிப் புண்ணியமில்லை. இப்போது அவர் கடத்தப்பட்டு விட்டார். அவரை மீட்டாக வேண்டும். எப்படி?

அதற்குமுன், ராஜ்குமாரை வீரப்பன் ஏன் கடத்திச் சென்றான் என்று தெரியவேண்டும். அப்போது தான், அவன் விரும்புவது என்னவோ, அதைக் கொடுத்துத் தொலைத்து, ராஜ்குமாரை விடுதலை செய்யமுடியுமா என்று பார்க்கலாம்.

அவர்களின் இந்தக் குழப்பத்துக்கான விடை, பர்வதம்மாவிடம் வீரப்பன் கொடுத்துச் சென்றிருந்த ஆடியோ கேஸட்டில் இருந்தது. தான் ராஜ்குமாரைக் கடத்திச் செல்வதன் நோக் கத்தை, கேஸட்டில் தெளிவாகச் சொல்லியிருந்தான் வீரப்பன்.

இதற்குமுன், சில சந்தர்ப்பங்களில், வீரப்பன் சரணடைய விரும்பியது உண்டு. ஆனால், இப்போது, அவனுடைய குரலில் அதற்கான தடயங்களே இல்லை. கம்பீரமான குரலில், எளிய மொழியில் பேசுகிறான் அவன்.

'எனக்குச் சில கோரிக்கைகள் உண்டு. அதையெல்லாம் நிறைவேற்றினால்தான், ராஜ்குமாரை விடுதலை செய்வேன். அதுபற்றிப் பேசுவதற்காக, உங்கள் தூதுவராக, என் நம்பிக்கைக்குரிய யாரையேனும் காட்டுக்குள் அனுப்புங்கள். அதுவரை, என்னைத் தேடியோ, ராஜ்குமாரை மீட்பதற்காகவோ, உங்கள் போலீஸை அனுப்பக்கூடாது.

ஏதாவது போலீஸ் தலை என் காட்டில் தென்பட்டால் கூட, நான் உடனடியாக, ராஜ்குமாரைக் கொன்றுவிடுவேன்!'

வீரப்பனின் குரலில், வழக்கமான உறுதியும் மிரட்டலும் கலந்திருக்கிறது. சட்டென்று, ஒரு மிகப் பெரிய பிரச்சினையில் மாட்டிக்கொண்டிருக்கிறோம் என்று அங்குள்ள எல்லோருக்கும் தெரிந்து விடுகிறது.

(தொடரும்)

# விசேட வைத்தியசேவை

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இன்றும்,எதிர்வரும 24ஆம் திகதியும் விசேட வைத்திய சேவை நடைபெறவுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர் டாக்டர் முகுந்தனும், டாகடர் திருமதி முகுந்தனும் இவ்வைத்திய சேவையை நடாத்தவுள்ளனர்.

டாக்டர் முகுந்தன் பொதுவைத்தியமும், டாக்டர் திருமதி முகுந்தன் காது, மூக்கு,தொண்டை வைத்தியமும் செய்யவுள்ளனர்.ஆகவே பொது மக்கள் இவ் வைத்திய சேவையை பயன்படுத்துமாறு வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சின்னத்தம்பி கேட்டுள்ளார். (த-35,52)

# கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வல்லிபுர ஆழ்வார் ஆலய பரந்தாமன் ஆச்சிரம கட்டடத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்,வரவேற்புரையையும் ஆசியுரையையும் வல்லிபுர ஆழ்வார் ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ சு.க.சுதர்சனக் குருக்கள்,வல்லிபுர ஆழ்வார் ஆலயக் குருக்கள் பிரம்மஸ்ரீ சு.க புருஷோத்தம குருக்கள், நெல் லண்டைப் பத்திரகாளி, வட பத்திரகாளி பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ தி.சோமாஸ்கந்தராசக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், வலலிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் இ.அன்னலிங்கம், ஊர்காவற்றுறை நீதிபதி பா.சுப்பிரமணியம்,பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவ நேசன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் இ.வரதீஸ் வரன், பருத்தித்துறை விசேட ஆணையாளரும், செயலாளருமான சி.பசுபதி, வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர் சபை செயலாளரும் ஆசிரியருமான கருணாமூர்த்தி, நீர்வேலி பிரதேசசபை செயலாளரும்,விசேட ஆணையாள ருமான த.நடராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கிராமசேவையாளர் மு.சிவசண்முகம், வடம ராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் ந.இன்பன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ந.அன்பு, கடற்றொழிலாளர் சங்க சமாசம் க.சூரியகுமார், கிராமசேவையாளர்களான சி.சிவபாலசிங்கம், ந.சேகர், யாழ். ஒன்றியம் வெண்மை வாணிப சங்கத் தலைவர் சி.சின்னத்துரை, வலம்புரி முகாமை யாளர் சி.வெற்றிவேலாயுதம், வடமராட்சி வெண்மை வாணிப சங்கச் செயலாளர் இ.ரவி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-9)

# கிராமத்தின் அபிவிருத்திக்கு மக்களின் ஒற்றுமை அவசியம்

(பருத்தித்துறை)

தும்பளை தெற்கு கிராமத்தின் அபிவிருத்தி மேம்பாட்டிற்கு எதிர் காலத்தில் முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கிராமத்தின் அபிவிருத்திகளுக்கு அக் கிராம மக்களின ஒற்றுமையும், சேவை மனப்பான்மையும். மிக முக்கியமானதாகும். இக். கிராமம் ஏனைய கிராமங் களுக்கு முன் மாதிரியாக விளங்கவேண்டும்.

பருத்தித்துறை தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையப் பொன் விழாவிலும் தமிழ் ஒலி மாணவர் மன்றப் பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டார். விழாவிற்கு-நிலையத் தலைவர் பீ. திருச்செல்வம் தலைமை தாங்கினார்.சிவஸ்ரீ தி.சோமாஸ்கந்த ராசாக் குருக்கள் ஆசியுரை நிகழ்த்தினார். தொடர்ந்து உரையாற்றிய பிரதேச செயலர் வரதீஸ்வரன் குறிப்பிட்டதாவது,

தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் பொன் விழாவும், தமிழ் ஒலி மாணவ மன்றத்தின் பரிசளிப்பு விழாவும்-சிறப்பாக நடைபெறுவது மகிழச்சிக்குரியதாகும். சனசமூக நிலையமானது பொன் விழாவைக் கொண் டாடுவது இலேசான விடயமல்ல. பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தே இச் சனசமூக நிலையம் 50 ஆண்டுகள் செயற்பட்டு வந்திருக்கிறது. சனசமூக நிலையம் சிறப்பாகச் செயற்படும் போது அக் கிராமம் அபிவிருத்தியில் மேம் பாடடையும். இக் கிராம மக்கள் பல்வேறு குறைபாடுகளுடன் வாழ்ந்து வரு வதைக் காண்கிறேன். இம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய எதிர் காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளபபடும் என்றார்.

சனசமூக நிலையப் பொன்விழா நினைவூட்டுகை பெயர்ப்பலகையைப பிரதேச செயலர் வரதீஸ்வரன் திரைநீக்கம் செய்து வைத்தார். இக் கிராமத்தில 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும் க.பொ.த (சா/த)தரப் பரீட்சை யிலும் சிறப்புச் சித்தியடைந்த 14 மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டது.

வடமராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் என்.இன்பன், இளைப் பாறிய உதவிப் பிரதேச செயலர் ஆ.சிவபுண்ணியம் (ஜேபி),கிராம சேவை உத்தி யோகத்தர் எஸ்.வசந்தகுமார் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

தும்பளை இளைஞர், யுவதிகளின் இசைக்கோலமும்,கலையரசு வேகரவின் நெறியாழ்கையின் " தண்டனை" நாடகம் (சிந்துநடை) உட்பட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (த-52)

இலங்கை விவகாரம் குறித்து ஆராய

# இணைத் தலைமை நாடுகளுக்கு ஜான் பீற்றர்ஸன் அழைப்பு

நோர்வே வெளிநாட்டமைச்சர் ஜான்பீற்றர்ஸன் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிற்கு எதிர்வரும் 19ஆம திகதி விசேட சந்திப்பொன்றினை நடாத்துவதற்காக அழைப்பு விடுத் துள்ளார்.

இலங்கையில் அதிகரித்துவரும் பாதுகாப்பு சிக்கல் மற்றும் யுத்த நிறுத்த நடவடிக்கையினை முழுமையாக நடைமுறைப்படுத்தல் போன்ற விடயங் கள குறித்து இச் சந்திப்பில் பிரதானமாக ஆராயப்படவிருப்பதாக நோர்வேத தூதரகம் தெரிவித்துள்ளது. (ற-4)

# விண்ணப்பம் கோரல்

சுகாதார பராமரிப்பு போசனை ஊவா வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சு மாணவ ஆண்,பெண் தாதிமார்களை பயிற்சிக்காக ஆட்சேர்த்தலுக்காக (2004) விண்ணப்பங்களை கோருகின்றது.

உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி அல்லது சாதாரண தரத்தில இரு அமர்வுகளில் நான்கு திறமைச்சித்தி உட்பட ஆறுபாடங்களில் சித்தியுடைய, இம்மாதம் 19 ஆம் திகதியில் 18வயதிற்கு மேற்பட்டவராக அல்லது 30 வயதிற்கு உட்பட்டவராக உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இம் மாதம் 19ஆம் திகதிக்கு முன கிடைக்கும் வகையில் பணிப்பாளர் (நிர்வாகம்),சுகாதார பராமரிப்பு போசனை, ஊவா வெல்லஸ்ஸ,அபிவிருத்தி அமைச்சு, சுவசிரிபாய, 385 பத்தேகம, விமலவங்ச தேரர் மாவத்தை,கொழும்பு-10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (த-21)

தூங்காமை கல்வி துணிவு உடைமை இம்மூன்றும்
நீங்காமை நிலன் ஆள்பவர்க்கு - குறள்

வலம்புரி

# கண்கெட்டபின்...

"வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி" என்பது ஓர் அருமையான கவி வரி. இரு வரிகளில் வாழ்க்கையின் முழுமையையும் கவிஞன் பொறித்திருக்கிறான்.

இந்த அருமையான கவி வரிகளோடு இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவையும் ஜனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் ஒப்புநோக்கிப் பார்ப்பது இந்த வேளையில் சாலவும் பொருத்தமுடையதாக இருக்கும்.

"இலங்கையில் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சில அரசியல் கட்சிகள் இடையூறாக இருக்கின்றன. அவற்றின் இனவாத, சமயக் கொள்கைகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாகக் காணப்படுகின்றது" என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதம் வழங்கும் வைபத்தில் உரையாற்றும்போது தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

மேலும் அரசினாலும் ஜே.வி.பி. என்ற அமைப்பினாலும் ஐம்பதாயிரம் சிங்கள இளைஞர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்றும் தனது கணவர் விஜயகுமாரதுங்கவும் அவ்வாறே கொலை செய்யப்பட்டதாகவும் தனது ஆற்றாமைத் துயரம் எனும் சோகத்தை பட்டதாரிகள் மத்தியில் வெளியிட்டார்.

பட்டதாரிகள் மத்தியில் அவரது உரையின் தாக்கம் சமாதானம் நாட்டில் அவசியம் என்பதை வலியுறுத்துவதாகவும், ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகளின் வளர்ச்சி தடுக்கப்படவேண்டும் என்ற நோக்கிலுமே அமைந்திருந்தது என்பது உட்கிடைப்பொருள்.

இது சரியானதும் உண்மையானதும் தான். ஆனால் அதனை இன்று ஜனாதிபதி கூறுவதை எந்த வகையில், நியாயம் என்று ஏற்றுக்கொள்ள முடியும்.

உண்மையில் ஜனாதிபதிக்கு சமாதானத்தின் மீதும், இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்பதிலும், பற்றுறுதியும் விருப்பமும் இருந்திருந்தால் அவர் அதனைச் செயற்படுத்த கிடைத்த அருமையான சந்தர்ப்பங்களை எல்லாம் ஏன் தவறவிட்டார்? என்ற வினா எழுவதும் அதற்கு அவர் ஒரு சமாதான விரோதி என்பதுமே இப்போதைக்கு சரியான விடை.

ஏனெனில் 1994 ஆம் வருடம் இலங்கைத் தீவில் சமாதானத் தேவதையாக மக்கள் மனங்களில் சப்பாணி கொட்டி அமர்ந்தவர். அந்தச் சந்தர்ப்பத்தில் உண்மையில் சமாதானத்தை அடையவேண்டும் என்ற விருப்பு இருந்தால் கருமமே கண் என அதனை அவர் நிறைவேற்றியிருக்கலாம். அதற்கு வலுவுடையதான சந்தர்ப்பம் கூட ஜனாதிபதிக்கு அப்போது காணப்பட்டது என்பதும் உண்மை. மேலும் எல்லாவற்றிற்கும் மேலாக சர்வ வல்லமையான நிறைவேற்று அதிகாரமும் அவரிடம் இருந்தது.

இவை எல்லாம் சமாதானத்திற்கு சாதகமாக பக்கபலமாக அமைந்திருந்த்போதும் அவர் தனது போலித் திரையை கிழித்து போர் அரக்கத்தனம் படர்ந்த நிஜ முகத்தைக் காட்டி நாட்டைத் துவம்சம் செய்தார். அவரின் கணவர் துப்பாக்கிக் கலாசாரத்தால் உயிரை இழந்தார். ஆனால் அவரின் போர் வெறித்தாண்டவத்தில் எத்தனையாயிரம் தமிழ்ப் பெண்கள் தாலியை இழந்தனர், பெற்ற பிள்ளைகளை இழந்தனர், உறவை இழந்தனர், நிம்மதியை, எதிர்கால கனவை இழந்தனர்.

இவற்றை எல்லாம் ஆட்சியில் நீட்டி அழிவைச் சாதனையாக்கிவிட்டு இப்போது வேதனைப்படுவது போன்று நடிப்பது அவரின் கணவரின் தொழில் சார் உண்மை.

நிறைவேற்று அதிகாரம் என்ற இறுமாப்புடன் பாராளுமன்றத்தை திடீர் திடீர் எனக் கலைத்து பூனை சுண்டெலி விளையாட்டு காட்டியவர். அப்போது கூட அவருக்கு சமாதானம் என்ற நினைப்பு அவரின் மனதை தொடவில்லை, உறுத்தவில்லை. மாறாக ஆட்சிக் கட்டிலை உறுதியாக்க ஜே.வி.பியின் காலை விழுந்து தொழுதவர். இப்போது ஜே.வி.பி. மீது குற்றப்பத்திரிகையை நீட்டுகிறார்.

சுளகு தனக்கு தனக்கு என்றால் படக்கு படக்கு என அடிக்குமாம். அது போல அப்போது ஜே.வி.பி. புனிதர்கள். இப்பொழுது பாவிகளாகிவிட்டார்களா! இத்தகைய நிலையில் இன்று இன்னமும் பதவியை விட்டு இறங்க சொற்ப நாட்கள் இருக்கும் தறுவாயில் ஜனாதிபதி சமாதானம் பற்றி பேசுவது கண்கெட்ட பிறகு சூரிய வணக்கம் செய்வதைப் போன்றதாகும். இப்போது முதற் பந்தியில் குறிப்பிட்டது போன்று "வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடம்" என்ற கவி வரி யாருக்கு பொருந்தாவிடினும் ஜனாதிபதி சந்திரிகாவின் வாழ்க்கை, அவரின் வீணாகிப் போன பதவிக் காலம் ஜனாதிபதி வேட்பாளர்களான ரணிலுக்கும் மகிந்தவுக்கும் பாடமாக அமையும். அமையவேண்டும்.

# ஜே.வி.பி, ஹெல உறுமயவின் ஆதரவுடன் மஹிந்த வென்றால் யுத்தம் ஏற்படுவது உறுதி

## -கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய உதவியுடன் சுதந்திரக்கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றால் நாடு யுத்தத்தைச் சந்திக்க வேண்டி இருக்கும் என்று புதிய இடது முன்னணி தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண எச்சரித்துள்ளார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் பேசியதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொண்டர்களின் தோளில் ஏறிக்கொண்டு ஜே.வி.பி,ஜாதிக ஹெல உறுமய பேரினவாதிகளின் பொது வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ உருவெடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சென்ற பாதைகளிலிருந்து முற்றிலுமாக நீத்து வேறு பாதையில் மஹிந்த ராஜபக்ஷ பயணமாகி வருகிறார். நாட்டின் ஜனநாயக சக்திகளும் உண்மையான இடதுசாரிகளும் மஹிந்த ராஜபக்ஷவின் யுத்தத்தை நோக்கிய இந்த நடவடிக்கைக்கு ஒருபோதும் உதவியாக இருக்கமாட்டார்கள். அவர் தனக்குத் தானே குழிபறித்துக்கொள்கிறார்.

ஏகாதிபத்திய சக்திகள் நாட்டின் அரசியலைத் தீமானிக்கக் கூடியதாக இருக்கும் நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டை சந்திரிகா குமாரதுங்க கோரியுள்ளார்.

நோர்வே அனுசரணையாளர்கள் வெளியேற வேண்டும் என்பதை புதிய இடது முன்னணி ஏற்றுக்கொள்கிறது. இருப்பினும் வெளிநாட்டு சக்திகளின் தலையீடின்றி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு நேரடிப் பேச்சுக்களை நடாத்த வேண்டும்.

சர்வதேச நாடுகளின் உதவியுடன் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை மேற்கொண்டால் இங்கே ஒரு தேசங்கள் இருப்பதை அவர் ஏற்றுக்கொள்வதாகவே அர்த்தம். அதுவே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கான சர்வதேச அங்கீகாரத்துக்கு வழிவகுக்கும். சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடவில்லை.இனவெறியர்களின் பிரதிநிதியாகவே அவர் போட்டியிடுகிறார் என்றார் விக்கிரமபாகு கருணாரட்ண.(ற)

# ஜே.வி.பி, ஹெல உறுமயவின் நிபந்தனைகளுக்கு பொ.ஐ.ஐ.மு. கூட்டுக் கட்சிகள் கடும் அதிருப்தி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக்கட்சி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதற்காக ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயக் கட்சிகள் விதித்துள்ள நிபந்தனைகள் குறித்து ஆளும் பொதுஜன ஐக்கிய மக்கள் முன்னணியின் கூட்டணிக்கட்சிகள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரைத் தோற்கடிப்பது அவசியமாக இருந்தாலும் இனவாத கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது தவறானது என்று அக்கட்சிகள் கருதுவதாகத் தெரியவருகிறது. இது குறித்து மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்த கூட்டணிக் கட்சித் தலைவர்கள் ஜே.வி.பி,ஜாதிக ஹெல உறுமயவின் ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு முடக்கம் உட்பட 12 நிபந்தனைகள் குறித்து யுத்த நிறுத்த ஒப்பந்தம் குறித்த இனவாதக் கட்சிகளின் நிபந்தனைகளையும் அக்கட்சித் தலைவர்கள் நிராகரித்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்த மஹிந்த ராஜபக்ஷ ஊடகங்களில் இவை தொடர்பாக வெளியாகும் செய்திகள் தவறானவை என்று கூறியுள்ளார். ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு என்பது தற்காலிகமானதுதான். அதை முடக்குவதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம். பொதுக்கட்டமைப்பை செயற்பாடுள்ளதாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் குறித்து பேச்சுகளை நடாத்துவதற்கும் கூட்டணிக் கட்சித் தலைவர்களிடம் மஹிந்த ராஜபக்ஷ ஒப்புக்கொண்டதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. (ற)

# சர்வதேச சமூகம் எமது போராட்டத்தை அங்கீகரித்து சிங்கள அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## இனப்பிரச்சினை தீர இதுவே வழி என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

இன்று தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயங்கள் யாவும் பிள்தள்ளப்பட்டுவிட்டன.ஜனாதிபதித் தேர்தலே கொழும்பைப் பொறுத்தவரையில் முக்கியமான பிரச்சினையாக உள்ளது. ஜே.வி.பியின் ஆதரவை எப்படிப் பெறுவது, முஸ்லிம்களின் ஆதரவை எப்படிப் பெறுவது, தமிழர்களின் ஆதரவை எப்படிப் பெறுவது என மொத்தத்தில் ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்கான வியூகத்தை அமைப்பதே இன்று ஆளும்கட்சியினதும், எதிர்க்கட்சியினதும் தலையாய பிரச்சினையாக உள்ளது என அண்மையில் ஊரெழுவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

எமது பிரச்சினையை நாம் இரண்டாம் கட்டமான பிரச்சினையாக தள்ளிவிட முடியாது. விரைவான, நிரந்தரமான தீர்வை நோக்கி நாம் முன்னேற வேண்டும். யுத்தத்திற்கு முழுமையான முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அவ்வாறாயின் இனப்பிரச்சினையின் இன்றைய நிலையையும்,தமிழ் மக்களின் இன்றைய நிலையையும் சர்வதேச சமூகத்திற்கு நாங்கள் கூறியாக வேண்டும். இதன் ஒருபடியாகத் தான் வவுனியாவிலும், மட்டக்களப்பிலும், கிளிநொச்சியிலும் தமிழ் எழுச்சி பெருவிழாக்கள் நடாத்தி அதனூடாக தமிழ் மக்களின் கோரிக்கைகளை பிரகடனப்படுத்தி வருகின்றோம்.

இந்த வகையில் யாழ்ப்பாணத்திலும் வருகின்ற 30ஆம் திகதி பொங்கு தமிழ் என்ற பெயரில் தமிழர் எழுச்சி பெருவிழா ஒன்றை நடாத்த உத்தேசித்துள்ளோம். இப்பெருவிழாவில் இராஜதந்திரிகள்,சர்வதேச ஊடகவியலாளர்கள், சிங்கள ஊடகவியலாளர்கள்,சிங்கள அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் எனப் பலரை அழைக்க இருக்கின்றோம். இவர்களின் முன்னிலையில் எமது நிலைப்பாட்டினைத் தெளிவாகக் கூற விரும்புகின்றோம்.

கடந்த மூன்று வருடத்துக்கு மேலாக யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வந்த போதும், அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவில்லை, மக்கள் மீளக் குடியேற முடியவில்லை. இராணுவ பிரச்சினைகள் மக்கள் மத்தியில் இருந்து அகற்றப்படவில்லை. இடைக்கால நிர்வாக சபைக்கான ஓர் வரவை தமிழர் தரப்பில் முன் வைத்த பொழுதும் அரசு அது தொடர்பாக பேச முன்வரவில்லை.

இறுதியாக சுனாமித் தாக்குதலின் பின்னர், இப்பேரழிவால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மக்களுக்கு அரசும் புலிகளும் இணைந்து புனர் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசு கேட்ட எல்லா வற்றையும் விட்டுக்கொடுத்து ஓர் பொது உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட போதும்,உயர் நீதிமன்றத்தால் அதுவும் முடக்கப்பட்டது.


இந்நிலையில் தமிழர்கள் ஆகிய நாம் என்ன செய்ய முடியும். பொதுமக்கள், போராளிகளாக ஒரு இலட்சம் மக்களை போராட்டத்தில் நாம் பலி கொடுத்துள்ளோம். பல தசாப்த காலங்களாக பொருளாதாரத்திலும், கல்வியிலும் பின் தள்ளப்பட்டுள்ளோம். கோடிக் கணக்கான பெறுமதி மிக்க சொத்துக்களை நாம் இழந்துள்ளோம். இவை எல்லாம் ஏன் நடந்தன? தமிழ் மக்களின் விடுத லைக்காக அவர்களின் சுதந்திரத்திற்காக கௌரவமான வாழ்விற்காக.

எனவே அரசின் கையாலாகாத்தனத்தையும், இயலாமையையும், இனப்பிரச்சினை தீர்வில் அக்கறையின்மையையும் நாம் சர்வதேச சமூகத்திற்குச் சொல்லியாக வேண்டும். தமிழ் மக்களுடன் இணைந்து வாழ சிங்கள மக்கள் தயாராக இல்லை என்பதை நாம் சொல்லியாக வேண்டும். எனவே சர்வதேச சமூகம் எமது சுயநிர்ணய உரிமையை, அதற்கான எமது போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதை நாம் அவர்களிடம் கோர வேண்டும். அதுவே சிங்கள அரசாங்கத்துக்கு மேலும் அழுத்தத்தைக் கொடுப்பதற்கான வழியாகும்.

யுத்தத்தை தவிர்த்து ஏனைய சாத்வீக வழிகளில் எமது போராட்டத்தை தொடர்வதாயின், முழு மக்களின் பங்களிப்பும் அவசியம். எனவே சர்வதேச இராஜதந்திரிகள் உட்பட சர்வதேச ஊடக வியலாளர்களும் கலந்துகொள்ளும் இவ் எழுச்சிப் பெரு விழாவில் நீங்களும், ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கில் கலந்துகொள்வதன் மூலமே எமது பலத்தையும், எமது ஆத்மார்த்தனமான கோரிக்கைகளையும் அவர்களுக்கு தெளி வுபடுத்த முடியும்.

எனவே, தீர்வை நோக்கி நாங்கள் நகர, எமது கௌரவமான கோரிக்கைகளை வென்றெடுத்திட, அதற்கான சர்வதேச ஆதரவை, அங்கீகாரத்தை பெற்றிட,இன்னுமோர் யுத்தத்தை தவிர்த்து, பேச்சுவார்த்தையூடாக தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாயின் நீங்களும் அணி அணியாக இதில் கலந்துகொள்ள வேண்டும் என்றார். (த)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

ஞான ஒளி பெற்றவர்களின் தொடர்பு எளிதில் கிடைப்பதில்லை. ஐந்து நிமிடங்கள் அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டால் போதும். அது வாழ்க்கை முழுவ தையும் மாற்றி அமைத்துவிடும். உனக்கு ஏதாவது தீங்கு நேருமாயின் இறைவன் உன்னுடன் விளை யாடுகிறான் என நினைத்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் இரு.

சுவாமி விவேகானந்தர்

# புலனாய்வு அதிகாரிகளை கொலைசெய்ய சிங்களப் புலிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

## கொழும்பு ஊடகம் செய்தி

(கொழும்பு)

பொலனறுவையில் உள்ள பாதுகாப்புப்பிரிவு புலனாய்வாளர்களை கொலை செய்வதற்காக விடுதலைப்புலிகள் 20 சிங்களப் புலி உறுப்பினர்களை ஈடுபடுத்தியுள்ளதாக பாதுகாப்பு பிரிவுத்தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளிடம் அதிக ஊதியத்தை பெற்று செயற்படும் இச்சிங்களப்புலிகளில் இராணுவம், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையில் இருந்து தப்பியோடியவர்கள் இருப்பதாக புலனாய்வு பிரிவுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இவர்கள் மின்னேரியா, அரலங்கவில, வெலிகந்தை, பொலனறுவை ஆகிய பிரதேசங்களிலேயே பெருமளவில் உலாவிவருகின்றனர் என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு சிங்கள புலி உறுப்பினர் அண்மையில் வாகன விபத்தில் உயிரிழந்தவர். இவர் மின்னேரிய இராணுவமுகாமிற்கு எதிரில் குடியிருந்துள்ளார்.

விபத்தில் சிக்கி கொழும்பு தனியார் மருத்துவமனையில் அவர் சிகிச்சைப் பெற்று வந்தபோது தமிழர் ஒருவர் அவருக்கான ஒன்றரை இலட்சம் ரூபா மருத்துவக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார்.

ஹிங்குரக்கொட இராணுவ முகாமிற்கு அருகிலுள்ள பிரதேசத்தில் குடியிருந்த விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் நபரொருவர் தற்போது தலைமறைவாகியுள்ளார். என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–4)

# அனுசரணையாளர் பணியிலிருந்து நோர்வே ஒருபோதும் விலகாது

## அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஐக்கிய நாடுகளின் அமைப்பை இணைத்துக்கொள்ளப்போவதாக வெளியான செய்திகளை அரசாங்கம் மறுத்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

தற்போது அனுசரணையாளர் பணியினை மேற்கொண்டு வரும் நோர்வேக்குப் பதிலாக சமாதான நடவடிக்கைகளில் மத்தியஸ்தம் வகிக்க ஐக்கிய நாடுகள் சபைக்கு எதுவித அழைப்பும் விடுக்கவில்லை.

சிறுவர்களை படையில் இணைத்துக்கொள்ளல் , அரசியல் படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்தே கவனம்செலுத்துமாறு ஐக்கியநாடுகள் அமைப்பிடம் அரசாங்கம் கேட்டுள்ளது.

இதேவேளை இனப்பிரச்சினை தீர்வில் அனுசரணையாளர்பணியை மேற்கொள்ளும் நோர்வே அப்பணியில் இருந்து ஒருபோதும் விலகாதென அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா.சிறப்புத்தூதுவர் லக்தர் பெர்ஹமி உறுதியளித்திருந்தமையை நினைவூட்டுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச–4)

# அரசியல்துறை செயலகம் பளையில் இயங்குகின்றது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைச்செயலகம் தற்போது பளையில் இயங்குகின்றது. வடக்கு கிழக்கில் இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதிகளில் இருந்த அரசியல்துறைப் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த தாக்குதல்களை அடுத்து அவர்களை தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு திரும்புமாறு புலிகளின் தலைமை அறிவித்தது.

இதன் அடிப்படையில் பொற்பதி வீதியில் இருந்த யாழ்.மாவட்ட அரசியல் துறைச்செயலகம் அங்கிருந்து வெளியேறி பளையில் செயற்பட்டு வருகின்றது.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளியேறியதை அடுத்து ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை பளையில் நடைபெறவுள்ளது. (ச–8)

# ஜாதிக ஹெல உறுமயவுடனான உடன்படிக்கை எதிர்வரும் 13ந் திகதி கைச்சாத்திடப்படும்

## அத்துரலியேதேரர் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிப்பது தொடர்பாக சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கும், ஜாதிக ஹெல உறுமயவிற்குமிடையேயான உடன்படிக்கை எதிர்வரும் 13ஆம் திகதி கையெழுத்திடப்படவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு தலதா மாளிகையில் இவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்படுமென்றும் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலியேரத்ன தேரர் தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரரும் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளனர்.

அதன்பின்னர் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அஸ்கிரிய ,மல்வத்த பீடாதிபதிகளை மகிந்த ராஜபக்ஷ சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மகிந்தராஜபக்ஷவை ஆதரிக்க 12 நிபந்தனைகளுடனான இணக்கத்தை ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ச–4,8)

# பிரதமர் மகிந்த ராஜபக்ஷ...

தனது கடிதத்தில் கடுமையாகச் சாடியுள்ளார்.

சுனாமி நிவாரணப் பொதுக் கட்டமைப்பு என்பது அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதமராலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு ஆவணம்.

அதனை முற்றாக கைவிடும் அதிகாரத்தை கட்சி அவருக்கு வழங்கவில்லை.அத்துடன் ஒற்றையாட்சியின் கீழ் உலகின் எந்த நாட்டிலும் அதிகாரங்களைப் பகிரமுடியாது. அப்படியிருக்கும் பொழுது இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கல் மூலம்தான் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு மாற்றுப் பொறுப்பு பிரதமருக்கு வழங்கப் படவேண்டும் என்று தொனியில் ஜனாதிபதி அக்கடிதத்தினை அனுப்பியுள்ளார்.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், பிரதமருமான மகிந்தராஜபக்ஷவை அக்கட்சியிலிருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதித்தேர்தல் தொடர்பாக ஜே.வி.பியினருடன் கூட்டுச் சேர்ந்த மகிந்த ராஜபக்ஷ அது தொடர்பான ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டதையடுத்து ஆத்திரமடைந்துள்ள ஜனாதிபதி, சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுடன் கூடி இம் முடிபினை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச–4)

# யுத்த நிறுத்தம் ...

நடாத்துவது குறித்து முடிபு மேற்கொள்ள இயலாமல் இருப்பது குறித்து நோர்வே வருத்தம் கொள்கிறது.

இருப்பினும் யுத்தநிறுத்த அமுலாக்கப் பேச்சுக்களை நடத்துவதற்கான இடம் குறித்து விவாதிக்க இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவரான றொண் புறூவ்ஹெவ்டே இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நோர்வேயின் விசேட தூதுவர் றொண் புறூவ்ஹெவ்டே அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளார்.

யுத்த நிறுத்த அமுலாக்கம் தொடர்பாக இரு தரப்பினருடனும் றொண் புறூவ்ஹெவ்டே பேச்சுக்களை நடத்துவார் என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–4)

# கதிர்காமர் கொலை...

ஹேவாஹெட்டை, டயகம, புசல்லாவ,பொகவந்தலாவ , வட்டகொடை ,தலவாக்கலை,டிக்கோயா, பூண்டிலோயா , நானுஓயா,ராகலை, இங்கிரிய,தெஹியோவிட்ட மற் றும் பொறளையைச் சேர்ந்த இவர்களிடம் விசாரணைகள் மேற்கொள் ளப்பட்டதாகவும் இவர்கள் வேலை வாய்ப்புகளுக்காக கொழும்பிற்கு வந்து தங்கியிருப்பவர்கள் என்றும் தெரிவித்த பொலிஸார் இவர்களுக்கும் அமைச்சர் கதிர்காமரின் கொலைக்கும் சம்பந்தம் இருப்பதற்கான எந்தத்தகவலும் கிடைக்கவில்லையென்றும் தெரிவித்தனர்.

இவர்களிடம் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்த பொலிஸார் தேவை ஏற்படின் நீதிமன்றத்தின் முன் ஆஜராக வேண்டுமெனக்கூறி இவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக வும் நீதிமன்றத்திற்கு தெரிவித்தனர். (ச–4)

# முன்னாள் புளொட்...

உறுப்பினரான கேதீஸ் எனப் படும் வில்வராசா கோபால் (வயது 47) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கோபாலுடன் உடன்சென்ற மற்றொரு நபர் காயமடைந்துள்ளார். இவர் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் கல்வி கற்பிக்கும் செல்வராசா பார்த்தீபன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச–4,8)

# இராணுவப்புலனாய்வு...

வவுனியாப் பொலிஸார் ராஃபீக்கின் உடலை கைப்பற்றியுள்ளனர் இக்குண்டுகள் 9மில்லிமீற்றர் துப்பாக்கிக்குரியவை என வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எம்.சி. அபயசிங்க பண்டார தெரிவித்தார்.

இவர் சன நெருக்கடி மிகுந்து காணப்பட்ட பகுதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயமே துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு விஜயம் மேற்கொண்ட வவுனியா மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் விசாரணைகளை மேற்கொண்டார்.

இதேவேளை வவுனியா மாவட்ட யுத்த நிறுத்தக்கண்காணிப்பாளர்களும் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இச் சம்பவத்தையடுத்து பெருமளவான இராணுவத்தினர் ,விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர். (த–4;9)

# கொழும்பில் ...

அனைத்து வாய்ப்புக்களையும் ஐரோப்பிய ஒன்றியம் திறந்தே வைத்துள்ளது.

அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்தே ஆழிப்பேரலை மீளமைப்பிற்கான பொதுக்கட்டமைப்பை மேற்கொள்ளவேண்டும் என்றே ஐரோப்பிய ஒன்றியம் விரும்புகின்றது என்றார் அவர். (ச)


DAY CLASS
A/L-2006
[கலை, வர்த்தகப் பிரிவுகள்]
ஆரம்பம்
செப்டெம்பர்–12 (திங்கள்)
காலை-8.30
D.M.I
JAFFNA
(C1636)

யாழ்.நகரில் கலை,வர்த்தகத்திற்கு
தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
விஞ்ஞான கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L DAY CLASS பிரிவு 1 ஆரம்பம் :-12-09-2005 [8.30]
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| ACC. :-திரு. பாலவாசன் | HIST. :- திரு. சுதன் |
| ECO. :- திரு. உதயன் | P/SU. :-திரு. றொபின்சன் |
| B.st. :- திரு. முரளி | Tamil :-திரு. குழந்தை |
| LOG :-திரு. சயந்தன் | HIC. :-திரு. ஜெயக்குமார் |
| LOG :-திரு. ஜெயந்தன் | HIN. :-திரு. தரன் |
| Geo. :-திரு. பாபு | Chri. :-திரு. வசந்தன் |
| | Drama :-திரு. மதி |

வெளியூர் மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து தரப்படும்.
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

விற்பனைக்கு
கடையுடன் சேர்ந்த வீடு அமைந்துள்ள ஐந்து பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புக்கு:- தி.சற்குணராஜா (கடைஐயர்) டச்சுவீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(C-9873)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது | யாழ்ப்பாணம்
கார்த்திக், ரோஜா, ரம்பா, விவேக் நடித்த
சந்தித்த வேளை
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ்,நமீதா,வடிவேல் நடிப்பில்
இங்கிலிஷ்காரன்
கா.நே: 11.00,2.45,6.00 (பு.நே)

மனோகரா | யாழ்.
புதிய வெளியீடு
09.09.2005 முதல்
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டிஜெயா
கா.நேரம்: 10.30;2.30;6.30;9.30


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியி[illegible] அவர்களது அச்சகத்தில் 10.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.